Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 126

வெள்ளிக்கிழமை
01 ஏப்ரல் 2022

பங்குனி 18 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16

விலை: 40/=

## இன்று 12 மணிநேர மின்வெட்டு

கொழும்பு, ஏப்.1
நாடு முழுவதும் இன்று சுழற்சி முறையில் 12 மணி நேரம் மின்வெட்டு 15





# கோத்தாபயவின் வீடு மக்களால் முற்றுகை!

- தன்னிச்சையாக திரண்ட 5,000 பேர்
- கோத்தா வீட்டில் இருந்து தப்பியோட்டம்
- உடன் பதவி விலகுமாறு கோஷம்
- மக்கள் மீது கண்ணீர் புகைக்குண்டு வீச்சு
- பொலிஸார் பலருக்கு காயம், பொலிஸ் பஸ் எரிப்பு
- நேற்று இரவிரவாகப் பதற்றம்

கொழும்பு, ஏப்ரல் 1

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் இல்லத்துக்குச் செல்லும் மிரிஹான பெங்கிரிவத்தை வீதியில் நேற்று இரவு திடீரென பெரும் திரளான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பெரும் எண்ணிக்கையான இளைஞர், யுவதிகள் அங்கு திரண்டதால் பெரும் பதற்றம் ஏற்பட்டது. 15

## நாட்டில் எதுவும் "இல்லை" வீதிக்கு இறங்கும் மக்கள்

### நாட்டின் பல பாகங்களிலும் நேற்று ஆர்ப்பாட்டங்கள்

கொழும்பு, ஏப்.1
மின்சாரம், எரிபொருள் மற்றும் எரிவாயுப் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கக் கோரி நேற்று நாட்டில் பல 15

## உதயன் இனி 40 ரூபா!

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் பத்திரிகைக்கான காகிதாதிகள், அச்சுப் பொருள்கள் மற்றும் எரிபொருள் விலைகள் வெகுவாக அதிகரித்திருக்கின்றன. கடந்த சில மாதங்களாகவே நீடித்துக் கொண்டிருக்கும் இந்த நெருக்கடிகளைத் தாங்கியவாறே உதயன் வெளிவந்துகொண்டிருக்கிறான்.

ஆயினும் இந்த நெருக்கடிகள் தீர்வின்றித் தொடரும் நிலையில், எமது இயலுமை நிலையையும் தாண்டிய இந்த அசாதாரண நிலையைச் சமாளிப்பதற்காக விலையில் சிறிய அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உதயன் ஆளாகியிருக்கின்றான்.

01.04.2022 (இன்று) முதல் உதயன் நாளிதழின் விலையை 40 ரூபாவாகவும், உதயன் வார இதழின் (சஞ்சீவி – உதயன்) விலையை 50 ரூபாவாகவும் நிர்ணயிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கின்றது.

பல்வேறு நெருக்கடிகள் சூழ்ந்த காலத்தில் உதயனுக்கு பக்கபலமாக நின்ற வாசகர்கள், தற்போதைய நெருக்கடி நிலைமையை உணர்ந்து தோளோடு தோள் நிற்பார்கள் என்று உதயன் நம்புகின்றான். இந்த விலை மாற்றத்தை பொறுத்தருளி, இதுவரை காலமும் வழங்கிய உங்கள் ஆதரவை தொடர்ந்தும் வழங்குவீர்கள் என்று அன்புரிமையோடு உதயன் எதிர்பார்க்கின்றான்.

(ஆ-ர்)

## கோவளத்தில் கேரள கஞ்சா

### மூவர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.1
பருத்தித்துறை, கோவளம் கடற்கரையில் 66 கிலோகிராம் கேரளக் கஞ்சா கைப் 15

## யாழில் சனியன்று ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.1
விலை உயர்வைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 15

### யாழ்ப்பாணத்தில் உள்ள

## துணைத்தூதரகம் ஊடாக தமிழ்மக்களுக்கு உதவி!

### இந்தியப் பிரதமரிடம் மு.க.ஸ்டாலின் கோரிக்கை

சென்னை, ஏப்.1
யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகம் ஊடாக இலங்கைத் தமிழர்களுக்கு உதவி 15

## சகோதரர்கள் கடலில் மாயம்

முல்லைத்தீவு, ஏப்.1
முல்லைத்தீவு, புதுமாத்தளனில் இருந்து கடற்றொழிலுக்குச் சென்ற இரு சகோதரர்கள் காணா 15

## டீசல் இன்றிச் செயலிழக்கும் மின் உற்பத்தி நிலையங்கள்

கொழும்பு, ஏப்.1
நேற்று மாலையுடன் எரிபொருளில் இயங்கும் அனைத்து மின் உற்பத்தி நிலையங்களின் செயற்பாடு 15

### கொரோனா

## இடைத்தங்கல் நிலையங்களில் பொருள்கள் மாயமாகவில்லை

யாழ்ப்பாணம், ஏப். 1
யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டிருந்த கொரோனா இடைத்தங்கல் 15

### வடக்கு மருத்துவமனைகளில்

## 210 தாதியர்களுக்கு திங்கள் நியமனம்!

யாழ்ப்பாணம், ஏப். 1
வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட மருத்துவமனைகளுக்கு எதிர்வரும் 15

## இலங்கை ஒளிர்வது ஐ.ஓ.சியின் கையில்!

கொழும்பு, ஏப்.1
லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்திடம் இருந்து உரிய நேரத்தில் 6 ஆயிரம் மெற்றிக்தொன் 15

## பரீட்சைகளுக்கு ஆபத்து இல்லை

கொழும்பு, ஏப்.1
பிரதான பரீட்சைகளைத் திட்டமிட்டவகையில் நடத்துவதற்குத் தேவையான காகிதாதிகள் கையிருப் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலுக்கான நேரம் இதுவல்ல

## இரண்டு ரூபா எரிபொருள் உயர்வுக்காக போராட்டம் நடத்திய மஹிந்த தெரிவிப்பு

**கொழும்பு, ஏப். 1**
**இது அரசியல் செய்யும் நேரம் அல்ல. அனைவரும் நாட்டைப் பற்றி சிந்தித்து உழைக்க வேண்டிய தருணம் -இவ்வாறு தெரிவித்தார் பிரதமர் மஹிந்த ராஜபக்ச.**

5 ஆயிரம் குளக்கட்டுகளை சீரமைக்கும் ஆரம்ப நிகழ்வு குருநாகலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

இன்று நாம் மிகவும் சிரமப்படுகிறோம். ஒரு நாடாக நாம் ஒரு தொற்று நோய்க்கு முகங்கொடுத்து வருவதுடன், வரலாற்றில் மிகவும் சவாலான நேரத்தை எதிர்கொள்கிறோம். உள்ளூர் வாதத்துக்கு முன்னுரிமை அளிக்கும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டமே எங்கள் நோக்கம். இத்திட்டம் யதார்த்தமாகும்போது விவசாயப் பொருளாதாரத்தை மட்டுமன்றி கிராமியப் பொருளாதாரத்தையும் பலப்படுத்த முடியும்.

இன்று மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருவதை நாம் அறிவோம். இவை நமக்குத் தெரியாதா? அல்லது அறிந்தும் அறியாதது போன்று உள்ளார்களா என்று சிலர் கேட்கிறார்கள். அதனால்தான் அனைத்துக் கட்சி மாநாட்டைக் கூட்டி நாட்டைப் பற்றி சிந்தித்து, அனைவரின் கருத்துக்களை கேட்டறிந்து, இந்த நிலையிலிருந்து மீண்டெழுவதற்கான தளமொன்றை நிர்மாணித்தோம். கொரோனாத் தொற்று எம்மால் உருவாக்கப்பட்டது அல்ல.

நாங்களே அதனைச் செய்தோம் என்று மக்களைத் தூண்டிவிட சிலர் முயற்சிப்பதைப் பார்த்தேன். எதிர்க்கட்சியில் இருந்தாலும் நல்ல யதார்த்தமான யோசனைகளை முன்வைக்க தயாராகவுள்ளோம். இது அரசியல் செய்யும் நேரம் அல்ல. ஒவ்வொருவரும் நாட்டைப் பற்றி சிந்தித்து உழைக்க வேண்டிய தருணம் இது -என்றார்.

மைத்திரி - ரணில் ஆட்சிக்காலத்தில் இரண்டு ரூபாவால் எரிபொருள் விலை அதிகரித்ததைக் கண்டித்துமஹிந்த போராட்டங்களை முன்னெடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)





## தந்தை செல்வாவின் நினைவுதினம் பல்வேறு இடங்களில் கடைப்பிடிப்பு

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் ஸ்தாபகத் தலைவர் தந்தை செல்வாவின் 124 ஆவது நினைவு தினம் யாழ்ப்பாணத்திலும் மன்னாரிலும் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தந்தை செல்வா நினைவிடத்திலும் யாழ்.மத்திய கல்லூரியில் உள்ள தந்தை செல்வா கலையரங்கத்திலும் மன்னார் நகர சுற்றுவட்டத்தில் அமைந்துள்ள நினைவிடத்திலும் அவரது நினைவேந்தல் கடைப்பிடிக்கப்பட்டது.

இதன்போது அனைத்து இடங்களிலும் அவரின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து, நினைவுத் தூபிக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

தந்தை செல்வா நினைவிடத்தில் நடைபெற்ற நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா, வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் தவிசாளர் எஸ்.சுகிர்தன், யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராஜா, கல்லூரி அதிபர், உட்பட கட்சி உறுப்பினர்களும், மன்னாரில் நடைபெற்ற நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், நானாட்டான் பிரதேசசபைத் தவிசாளர் தி.பரஞ்சோதி, மன்னார் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஒ-14-27-125-213-20)

## தங்கள் கைகளை தாங்களே வெட்டிக்கொள்ளும் மாணவர்

கிளிநொச்சி, ஏப். 1
கிளிநொச்சியிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றில் சுமார் 20 மாணவர்கள் தங்களது கைகளை தாங்களே சவரஅலகால் வெட்டியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் தரம் ஒன்பதில் கல்வி பயிலும் மாணவர்களே இவ்வாறு சவர அலகால் தங்கள் கைகளைத் தாங்களே வெட்டியுள்ளனர்.

இது தொடர்பில் சக மாணவர்களால் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் கல்விச் சமூகத்தை அதிர்ச்சியடையச் செய்துள்ளன.

இது தொடர்பில் உளநல மருத்துவர் ம.ஜெயராசா கருத்துத் தெரிவிக்கும்போது;
இவ்வாறான செயற்பாடுகள் ஒருவித உளவியல் பிரச்சினையாகக்கூட இருக்கலாம். கோபத்தைக் கட்டுப்படுத்தத் தெரியாமை, மனவுளைச்சல், பதின்ம வயதினருக்கே உரித்தான நாயகத்தன்மை என்பன இந்த நடவடிக்கைகளுக்கான காரணங்களாக அமையலாம்.

மாணவர்களின் இந்த நடவடிக்கை அவர்களின் எதிர்காலத்தில் கடும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

குறிப்பாக பொலிஸ், இராணுவம், நீதித்துறை போன்ற பிரிவுகளில் தொழில்களுக்குச் செல்லும்போது பின்னடைவை அது ஏற்படுத்திவிடும்.

எனவே உரிய மாணவர்களுக்கு உளவியல் சிகிச்சை வழங்கப்படும் -என்றார்.
(ம-214)

### அதிகளவான நிகர்ப்பெறுமதி கைமாறு

## தனியார் நிறுவன உரிமத்தை ரத்துச் செய்தது மத்திய வங்கி

டொலருக்கு நிகரான ரூபாவின் நிகர்ப் பெறுமதியை அதிகமான வழங்கியமைக்காக, கொழும்பில் தனியார் நிறுவனமொன்றின் பணப்பரிமாற்றல் உரிமத்தை இலங்கை மத்திய வங்கி இடைநிறுத்தியுள்ளது.

பொதுமக்களால் வழங்கப்பட்ட முறைப்பாட்டையடுத்து, மத்திய வங்கியின் அந்நியச் செலாவணி திணைக்களம் முன்னெடுத்த விசாரணைகளின் அடிப்படையிலேயே மேற்படி உரிமம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது. (ம)

## டீசலுடன் வந்த கப்பல் சர்வதேசக் கடற்பரப்பில்

கொழும்பு, ஏப். 1
இலங்கைக்கு டீசல் ஏற்றி வந்த கப்பலொன்று சர்வதேசக் கடற்பரப்பிலே தொடர்ந்து தரித்து நிற்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த கப்பலிலுள்ள டீசலை இறக்குவதற்குத் தேவையான நிதி அரசிடம் இன்மையே இதற்கு காரணம் எனவும் இதனால் தாமதக் கட்டணங்களைச் செலுத்தும் பொறுப்பையும் அரசு கொண்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் சந்தையில் தற்போது நிலவும் டீசல் தட்டுப்பாடு இன்னும் சில தினங்களுக்குத் தொடரவுள்ளது.

டீசல் கையிருப்பு இல்லாத காரணத்தால் நிரப்பு நிலையங்களில் வரிசைகளில் மக்களை காத்திருக்க வேண்டாமென்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

அத்துடன் ஏற்கனவே பெற்றுகொண்ட கையிருப்புக்களிலிருந்து அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரமே டீசல் வழங்கப்படும் எனவும் மேலும் தெரிவித்துள்ளது.

தாமதக்கட்டணங்கள் உள்ளடங்கலாக உரிய தொகைகள் அரசால் செலுத்தப்பட்டால் டீசலை இறக்கி விநியோகிக்க மூன்று நாள்கள்வரை ஆகும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தளத்தின் முதுநிலை அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (ச-ரி1)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஏப். 1
வட்டுக்கோட்டை அடைக்கலந்தோட்டம் கந்தசுவாமி கோயில் மஹோற்சவப் பெருவிழா எதிர்வரும் 7ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அதனைத் தொடர்ந்து 14 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும் 16 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என்று ஆலயப் பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஒ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் ஊரடங்கு

கொழும்பின் சில பகுதிகளுக்கு உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் நேற்று நள்ளிரவு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கொழும்பு வடக்கு, கொழும்பு தெற்கு, கொழும்பு மத்தி, நுகேகொட பொலிஸ் பிரிவு, களனி , தெஹிவளை ஆகிய இடங்களில் உடனடியாக ஊரடங்குச் சட்டம் நடை முறைக்கு வருகின்றது என்று பொலிஸ் மா அதிபர் நள்ளிரவு அறிவித்தார். அதேவேளை, நள்ளிரவு தண்டியும் மிரிஹான - பெங்கிரிவத்தை பகுதியில் ஆயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (எ)

### பந்துலவின் வீடும் முற்றுகை?

அமைச்சா பந்துலவின் வீடும் ஆர்ப்பாட்டக்காரர்களால் முற்றுகையிடப் பட்டுள்ளது என்று நேற்று நள்ளிரவுக்குப் பின்னர் தகவல் வெளியானது.





போராட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கலைப்பதற்கு சிறப்பு அதிரடிப்படையினர் இறப்பர் தோட்டாவைப் பயன்படுத்திச் சூடு நடத்தினர். ஆயினும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அந்த இடத்தில் இருந்து கலைய மறுத்தனர்.



கண்டி - கொழும்பு வீதியூடான போக்குவரத்து ஆர்ப்பாட்டக்காரர்களால் தடுக்கப்பட்டுள்ளது. வீதியின் குறுக்கே தீ வைக்கப்பட்டு, வீதியூடான போக்குவரத்தை ஆர்ப்பாட்டக்காரர்கள் தடுத்தனர்.



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களில் பலர் பொலிஸாரின் தாக்குதலுக்கு இலக்காகிக் காயமடைந்துள்ளனர். ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைக்க பொலிஸாரும், அதிரடிப்படையினரும் கடும் தாக்குதல்களை மேற்கொண்டனர்.



இரவு 12.30 மணி தாண்டியும் ஆயிரக்கணக்கானோர் அந்தப் பகுதியில் திரண்டிருந்ததால் பொலிஸாரும், சிறப்பு அதிரடிப் படையினரும் அவர்களைக் கட்டுப்படுத்த முடியாது திணறினர். பல்வேறு பகுதிகளில் இருந்தும் பொதுமக்கள் வந்து ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவண்ணம் இருந்தனர்.








எது நடக்கக் கூடாதெண்டு அரசாங்கம் நினைச்சுதோ அது நேற்றிரவில இருந்து நடக்கத் தொடங்கிட்டுது. நாடு முழுக்க காஸ் இல்லை, சீனியில்லை, பால்மா இல்லை, மண்ணெண்ணெய் இல்லை, பெற்றோல் இல்லை, டீசல் இல்லை, கரண்ட் இல்லை எண்டு ஒரே இல்லை, இல்லைதான். ஆனால் அரசாங்கத்தில உள்ளவையின்ர வீடுகளில மட்டும் எல்லாம் இருக்க, சனம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்குமோ? அதுதான் நேற்று மெயின் சுவிட்ச்சிலையே கைவைச்சிட்டுதுகள். நேற்றுப் பின்னேரமே அங்க சனம் கூடத் தொடங்கேக்ககூட இப்பிடி பிரச்சினை பெரிசாகும் எண்டு கோத்தா கூட கனவில நினைச்சிருக்கமாட்டார். ஆனால் நேரஞ் செல்லச் செல்ல சனங்களின்ர எண்ணிக்கையும் ஆவேசமும் கூடத் தொடங்கிட்டு. சும்மா நிண்ட சனத்துக்கு சூக்காட்டுற மாதிரி, பஸ் கணக்கில அதிரடிப்படையைக் கொண்டந்து இறக்கிச்சினம். அவ்வளவுதான், சனம் எல்லா தடையையும் உடைச்சுக் கொண்டு கோத்தாவை பிடிச்சிழுக்கிற கோபத்தோட 'கோ கோத்தா கோ!' எண்டு கத்திக் கொண்டு கையில பந்தங்கள், கல்லுகள் எண்டு அகப்பட்டதைத் தூக்கிக்கொண்டு வேட்டைக்கு கிளம்பிட்டுதுகள். எவ்வளவு ஆமியையயோ, அதிரடிப்படையையோ கொண்டந்து குவிச்சிருந்தாலும் ஆயிரக் கணக்கில சனம் வந்தால் என்னதான் செய்யமுடியும்? தண்ணியால அடிச்சுப் பாத்திச்சினம், கண்ணீர்ப்புகைக்குண்டு அடிச்சுப் பாத்திச்சினம். சனம் ஒருக்கா ஓடிப்போனாலும் பிறகு திரும்ப அதே இடத்துக்கு வந்து சேர. இவையால ஒண்டும் செய்ய முடியேலை.

கொழும்பில இரவிரவா நடந்து கொண் டிருக்கிற இந்த களேபரத்தைப் பார்க்க , அமெரிக்காவில ஒரு கறுப்பின ஆளை வெள்ளைக்கார பொலிஸ் கழுத்து நெரிச்சுக் கொலை செய்ததுக்காக சனங்கள் நீதி கேட்டு றோட்டில இறங்கிச் செய்த ஆர்ப்பாட்டங்கள்தான் நினைவுக்கு வருகுது. இவ்வளவு கலவரத்துக்குள்ளயும் எப்பிடியோ எங்கட ஜனாதிபதி தப்பி ஓடிட்டார். சொந்த நாட்டில, சொந்த வீட்டில கூட நிம்மதியா இருக்க முடியாதவரெல்லாம் எப்பிடி ஒரு நாட்டை பாதுகாப்பா வைச்சிருப்பாராம்? அநேகமா கோத்தாவை பதவியில இருந்து தூக்கிற வரைக்கும் இப்பிடியான போராட்டங்கள் ஓயாது எண்டுதான் படுகுது.


எந்தச் சிங்களச் சனத்தின்ர ஜனாதிபதி எண்டு கோத்தா மார்தட்டினாரோ, அதே சிங்களச் சனங்கள் 'பதவியை விட்டிட்டு வீட்டையும் விட்டு ஓடிப்போ' எண்டு கத்துற நிலைமை வந்ததை பார்த்து, எங்கட ஆக்கள் 'அண்டைக்கு முள்ளிவாய்க்கால், இண்டைக்கு மிரிஹான' எண்டு லைவ்வில நித்திரை முழிச்சுப் பார்த்திச்சினம். ஒருவேளை இதே மாதிரி ஒரு ஆர்ப்பாட்டத்தை யாழ்ப்பாணத்தில செய்து, பொலிஸ்காரருக்கு அடிச்சு, காயப்படுத்தி இருந்தால் என்ன நடந்திருக்கும்? காணாமல் போனவைக்காக நடத்தின ஆர்ப்பாட்டத்திலையே எங்கட அம்மாமாரை தலைமயிரைப் பிடிச்சுத் தள்ளி விழுத்தினவங்கள். இப்பிடி ஏதும் பிரகண்டமா நடந்திருந்தால், கட்டாயம் ஒரு நூறு பேரையாவது சுட்டுத் தள்ளி இருப்பாங்கள். ஆனால் சிங்களச் சனம் போராடினால் பார்த்துக்கொண்டிருப்பினம். நீதி கேக்கிறதுக்கு கூட சிங்களவராப் பிறந்திருக்க வேணும் போல.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு-கேது பெயர்ச்சி



## 21.3.2022 முதல் 8.10.2023 வரை

ராகு-கேது பெயர்ச்சி, வாக்கிய பஞ்சாங்கத்தின்படி கடந்த 21ஆம் திகதி பிற்பகல் 3.02 மணிக்கு பெயர்ச்சி ஆகியுள்ளார். இதில் ராகு ரிஷபத்தில் இருக்கும் கார்த்திகை 2ஆம் பாதத்திலிருந்து மேடராசியில் இருக்கும் கார்த்திகை 1ஆம் பாதத்துக்கும், கேது விருச்சிகத்தில் இருக்கும் விசாகம் 4ஆம் பாதத்திலிருந்து, ஜென்ம ராசியான துலாம்ராசி விசாக நட்சத்திரம் 3ஆம் பாதத்துக்கும் பெயர்ச்சியாக உள்ளார். திருக்கணித பஞ்சாங்கத்தின்படி 2022 ஏப்ரல் 12 ஆம் திகதி பிற்பகல் 1.38 மணியளவில் ராகு - கேது பெயர்ச்சி நிகழ்கிறது.

பூமிபோல பொறுமையும், சகிப்புத்தன்மையும் உடைய மீனராசியினரே, காரணகாரியம் இல்லாமல் எதையும் செய்யமாட்டீர்கள். கொடுத்துச் சிவந்த கைகளுடைய நீங்கள், பிறர் உழைப்பில் வாழமாட்டீர்கள். எங்கும், எதிலும் புதுமையைப் புகுத்தும் நீங்கள், மனசாட்சிக்கு மாறாக நடந்துகொள்ளாதவர்.

உங்களுக்கு 21.03.2022 முதல் 08.10.2023 வரையிலும் ராகுவும், கேதுவும் என்ன பலன்களைத் தரப் போகிறார்கள் என்று பார்ப்போம்.

இதுவரை உங்கள் ராசிக்கு மூன்றாம் வீட்டில் இருந்து கொண்டு புதிய திருப்பங்களையும், பிரமுகர்களின் நட்பையும், பணவரவையும் கொடுத்துவந்த ராகு பகவான் இப்போது உங்கள் ராசிக்கு இரண்டாம் வீட்டில் வந்து அமர்கிறார். பேச்சில் கவனம் தேவை. நீங்கள் பேசுவதை சிலர் தவறாகப் புரிந்துகொண்டு பிரச்சினைகளை ஏற்படுத்தலாம். குடும்பத்தில் அவ்வப்போது மனஸ்தாபங்கள் வெடித்தாலும் சந்தோஷம் குறையாது. வீட்டில் தடைப்பட்ட சுபகாரியங்கள், இனிச் சிறப்பாக நடக்கும். பிள்ளைகள் உங்களைப் பார்த்து திருந்தும் அளவுக்கு உங்களின் பழக்கவழக்கங்களை மாற்றிக்கொள்வீர்கள். உங்களிடம் அன்பாகப் பேசி பணம் வாங்கி ஏமாற்றியவர்கள், இப்போது திருப்பித் தருவார்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு.

**21.03.2022 முதல் 22.05.2022 வரை:** சூரியனின் கார்த்திகை நட்சத்திரம் 1ம் பாதத்தில் ராகு செல்வதால் வேற்று நாட்டினர், மொழியினரால் திடீர்த் திருப்பங்கள் ஏற்படும். ஆனால், அரசுக் காரியங்கள் தாமதமாக முடியும்.

**23.05.2022 முதல் 29.01.2023 வரை:** சுக்ரனின் பரணி நட்சத்திரத்தில் ராகு செல்வதால் வேலைச்சுமையால் பதற்றம், காரியத்தடைகள், ஆடம்பரச் செலவுகள் என வந்துபோகும். வீண் விமர் சனங்களைத் தவிர்க்கவும். பணவரவு உண்டு. பதவிகள் தேடி வரும். வாழ்க்கைத் துணைவருக்கு மருத்துவச் செலவு வரும்.

**30.01.2023 முதல் 08.10.2023 வரை:** கேதுவின் அஸ்வினி நட்சத்திரத்தில் ராகு செல்வதால் உங்களைப் பற்றி கிசுகிசுக்கள், வதந்திகள் வெளியாகும். சகிப்புத் தன்மையுடன் செயற்படுங்கள்.




**வியாபாரத்தில்:** பழைய பிரச்சினைகளைத் தீர்க்க புதுவழி கிடைக்கும். முன்பு போல் நஷ்டம் வராமல் இருக்க, புது யுக்திகளைக் கையாளுவீர்கள்.

**உத்தியோகத்தில்:** தொல்லை தந்த மேலதிகாரி இனி நட்புறவாடுவார். உங்களின் பொறுப்பு உணர்வைக் கண்டு புதிய பதவி, சலுகைகள் தருவார். ஆனால் சக ஊழியர்களால் மனஸ்தாபங்கள் வெடிக்கும். கணினித் துறையில் இருப்பவர்களுக்குப் புதிய வாய்ப்புகள் வரும். ஆனாலும் யோசித்து முடிவெடுப்பது நல்லது. கலைத்துறையினருக்குத் தள்ளிப்போன புதிய வாய்ப்புகள் தேடிவரும். பழைய நிறுவனங்கள் உங்களை அழைத்துப் பேசும். வசதி வாய்ப்புகள் அதிகரிக்கும்.

இதுவரை உங்கள் ராசிக்கு ஒன்பதாம் வீட்டில் அமர்ந்து தந்தைக்கு உடல்நலக் குறைவையும், கருத்துமோதல்களையும், சொத்துப் பிரச்சினைகளையும் தந்த கேது பகவான், இப்போது ராசிக்கு எட்டில் வந்து அமர்கிறார். கொஞ்சம் அலைச்சல் இருந்தாலும் மனநிம்மதி உண்டு. தன்னிச்சையாக முடிவெடுக்காமல் குடும்பத்தாரின் ஆலோசனையைக் கேட்டுச் செயற்படுங்கள். தடாலடியாக எந்தமுடிவையும் எடுக்கவேண்டாம். வாழ்க்கைத் துணைவருடன் போட்டி போடாமல் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. உறவினர்கள் சிலர் உங்களிடம் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். திடீர் பயணங்களால் கையிருப்புக் கரையும். உங்களையும் அறியாமல் ஒருவித பயம் வந்து நீங்கும்.

**21.03.2022 முதல் 24.09.2022 வரை:** குருவின் விசாகம் நட்சத்திரத்தில் கேதுபகவான் செல்வதால் திடீர் பணவரவு உண்டு. கௌரவப் பதவிகள் தேடி வரும். சொந்த ஊரில் மதிக்கப்படுவீர்கள். என்றாலும் அவ்வப்போது காய்ச்சல், சளித்தொந்தரவு வந்து நீங்கும்.

**25.09.2022 முதல் 04.06.2023 வரை:** ராகுவின் சுவாதி நட்சத்திரத்தில் கேது செல்வதால் ஏமாற்றம், வீண் பழி, உடல்சோர்வு, மன உளைச்சல், வேலைச்சுமை, விரக்தி என வந்து நீங்கும்.

**04.06.2023 முதல் 08.10.2023 வரை:** செவ்வாயின் சித்திரை நட்சத்திரத்தில் கேது செல்வதால் வீடு, மனை வாங்குவது, விற்பதில் இருந்து வந்த சிக்கல்கள் தீரும். சகோதரர் உதவுவார். வழக்குகளில் இருந்த பின்னடைவு விலகும். கேது ராசிக்கு 8ல் வந்து அமர்வதால் முன்கோபம் அதிகமாகும். மற்றவர்களின் பிரச்சினைகளில் மூக்கை நுழைக்காதீர்கள். எளிதாக முடிக்கவேண்டிய வேலையைப் போராடி முடிக்க வேண்டி வரும். செலவு இரட்டிப்பாகும்.

# சிறியோருக்கு நல்வழிகாட்டுவோம்

என் மீது நம்பிக்கை கொண்டுள்ள இச்சிறியோருள் எவரையாவது பாவத்தில் விழச் செய்வோருடைய கழுத்தில் இயந்திரக்கல்லைக் கட்டித் தொங்கவிட்டு ஆழ்கடலில் அமிழ்த்துவது அவர்களுக்கு நல்லது. ஐயோ பாவத்தில் விழச்செய்யும் உலகுக்குக் கேடு! பாவத்தில் விழுவதைத் தவிர்க்க முடியாது. ஆனால் ஐயோ! அதற்கு காரணமாய் இருப்போருக்குக் கேடு (மத் 18:6-7) இந்த இறைவார்த்தைகள் சட்டவாக்கம் பெற்றால் இன்று அநேகம் பேர் கடலுக்கு இரையாக நேரிடும்.

தவக்காலச் சிந்தனை

எதிர்காலத்தைச் செதுக்கும் சிற்பிகளாக திகழவேண்டிய இன்றைய இளைய தலைமுறையினர் பல்வேறு தீய நாட்டங்களில் சிக்கிச் சீரழிந்து வாழ்வைத் தொலைத்துக் கொண்டிருக்கின்றனர். குடிவெறி, போதைப்பொருள் பாவனை, பாலியல் முறைகேடுகள், ஆபாச வலையமைப்பு போன்றவற்றால் ஈர்க்கப்பட்டு பாவத்தின் கனத்தை உணராதவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

சமூகக் கட்டமைப்பைத் தலைகீழாக மாற்றும் இந்த ஈனச் செயற்பாடுகள், பாடசாலை மாணவர்கள் மற்றும் விவரம் அறியா சிறுவர்களூடாகத் திட்டமிட்டுத் திணிக்கப்படுகின்றது. சமூகத்தையும் குடும்பங்களையும் சிதைத்துப் பணம்தேட முனையும் உயர்மட்ட போர்வழிகள், முகவர்கள் கனகச்சிதமாக இந்தக் கீழ்த்தர கைங்கரியத்தை நிறைவேற்றுகின்றனர். இவர்களைக் குறித்தே இயேசு இயந்திரக்கல்லை கழுத்தில் கட்டி ஆழ்கடலில் தள்ளுமாறு எச்சரிக்கின்றார். சமூகச் சீரழிவுகளுக்கெதிராகக் குரல்கொடுப்பது இயேசு காட்டிய விடுதலையின் ஓர் அம்சமே. சிறியோருக்கு நல்வழிகாட்டிடுவோம்.

எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை

# திண்டாட்டத்தில் மக்கள்: அமைச்சர்கள் உல்லாசம்

கொழும்பு, ஏப். 1

நாட்டுமக்கள் உணவுக்காகப் போராடிவரும் நிலையில் தென்னிலங்கை அமைச்சர்கள் சிலர் களியாட்டத்தில் ஈடுபட்டமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் உயர் அதிகாரிகளுக்காக ஒதுக்கப்பட்ட வீட்டுத் தொகுதியில் அமைச்சர்கள் பலருக்கு மதுவிருந்து வைக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்களான நாமல் ராஜபக்ச, பிரசன்ன ரணதுங்க, பவித்ரா வன்னியாரச்சி மற்றும் ஷெஹான் சேமசிங்க உள்ளிட்ட அமைச்சர்களுக்கும், கம்பஹா மாவட்டத்தின் அரசாங்க உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகாரிகளுக்குமாக இந்த மதுபான விருந்து நேற்றுமுன்தினம் இரவு நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

### சாவுத்தண்டனை விதிக்கப்பட்ட

# பொதுஜன பெரமுனவின் எம்.பி. பிரேமலால் ஜயசேகர விடுவிப்பு

கொழும்பு, ஏப். 1

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் ஒருவரைச் சுட்டுக் கொன்ற குற்றச்சாட்டின் அடிப்படையில், சாவுத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த, பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர உள்ளிட்ட மூவர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். நிஸ்ஸங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஆர். குருசிங்க ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் குழுவால் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மேல் நீதிமன்றத்தால் தமக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை ரத்துச் செய்யுமாறு பிரேமலால் ஜயசேகர உள்ளிட்ட மூன்று பிரதிவாதிகளின் மேன்முறையீட்டு மனுக்களை ஏற்று மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. இதன்படி, நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர, முன்னாள் சப்ரகமுவ மாகாணசபை உறுப்பினர் நிலந்த ஜயக்கொடி மற்றும் கஹவத்தை பிரதேச சபையின் முன்னாள் தலைவர் வஜிர தர்ஷன ஆகியோர் குற்றமற்றவர்கள் என விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தீர்ப்பை அறிவித்த மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி நிஸ்ஸங்க பந்துல கருணாரத்ன, சம்பவம் இடம்பெற்ற போது பிரதிவாதிகளின் கைகளில் துப்பாக்கிகள் இருந்தமை மற்றும் துப்பாக்கிச் சூடு நடத்தியமைக்கான சாட்சியங்கள் இல்லை எனக் குறிப்பிட்டார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2029ஆம் ஆண்டு வரை நெருக்கடி தொடரும்!

## கூறுகிறார் அமைச்சர் பந்துல



**கொழும்பு, ஏப். 1**

**யார் ஆட்சி செய்தாலும் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலை 2029ஆம் ஆண்டு வரை தொடரும் என்பதே உண்மை. நாட்டு மக்கள் யதார்த்த நிலைமையை விளங்கிக்கொள்ளவேண்டும் என்று வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:- பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் நிலைமை கைமீறிச் சென்ற காரணத்தால் அரசு சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள தீர்மானித்துள்ளது. பொருளாதார மற்றும் கடன் நெருக்கடியில் இருந்து மீள்வது குறித்து சர்வதேச பொருளாதார நிபுணரின் ஆலோசனையைப் பெறுவதற்கு நால்வர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டுக் கையிருப்பு வரையறுக்கப்பட்டதை தொடர்ந்து தீவிரமடைந்துள்ள பிரச்சினைக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அரசையும், நல்லாட்சி அரசையும் குற்றஞ்சாட்டுவது பொருத்தமற்றதாகும். கடன் பெற்று அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்யும் கொள்கையை தொடர்ந்து பின்பற்றி வருகிறோம். திறந்த பொருளாதார கொள்கைக்கமைய ஏற்றுமதி சேவைத்துறை ஊடாக வருடாந்தம் 10 பில்லியன் டொலர் வருவாய் கிடைக்கப்பெறும்போது, இறக்குமதிச் செலவு 20 பில்லியன் டொலரைக் காட்டிலும் உயர்வடைகிறது. வருமானத்துக்கும், செலவுக்கும் இடையிலான வேறுபாட்டை வெளிப்படுத்துகிறது.

2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசுக்கு சர்வதேச ஒத்துழைப்பு முழுமையாகக் கிடைக்கப்பெற்றது. அக்காலப்பகுதியில் உலகச் சந்தையில் எரிபொருளின் விலை சடுதியாகக் குறைவடைந்தது. 2014ஆம் ஆண்டு எரிபொருள் இறக்குமதிக்காக செலவான நிதியுடன் ஒப்பிடுகையில் 2015ஆம் ஆண்டு எரிபொருள் விலை குறைவடைந்ததால் 2 பில்லியன் டொலர் அரசுக்குச் சேமிப்பானது. பொருளாதார முன்னேற்றத்துக்கு சாதகமான சூழல் காணப்பட்டபோதும் நல்லாட்சி அரசு அதனை முறையாக செயற்படுத்தவில்லை.

இறக்குமதி பொருளாதாரத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட்டதால் தேசிய பொருளாதாரம் பாதிக்கப்பட்டது. இறக்குமதித்துறையை முழுமையாக நம்பியிருக்கும் நிலைமையை நல்லாட்சி அரசு தோற்றுவித்தது. 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் இலங்கையின் சுற்றுலாத்துறை சேவை கைத்தொழிலை முழுமையாகப் பாதித்தது. 2018ஆம் ஆண்டு சுற்றுலாத்துறை சேவை ஊடாக 4.3 பில்லியன் டொலர் கிடைக்கப்பெற்றது. கொவிட் தாக்கம் சுற்றுலாத்துறை சேவை கைத்தொழிலை மேலும் பாதிப்புக்குள்ளாக்கியதால் 8 பில்லியன் டொலர் வருவாயை இழக்க நேரிட்டது - என்றார். (ஒ-இ)

## சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 1

இலங்கைக்குவரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. மாதாந்தம் ஒரு லட்சத்துக்கும் அதிகமான சுற்றலாப்பயணிகள் வர ஆரம்பித்துள்ளதாக சுற்றுலா அமைச்சு தெரிவித்துள்ளது.

2 ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக சுற்றுலாப் பயணிகளின் வருகை ஒரு மாதத்தில் ஒரு லட்சத்தை தாண்டியுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் 29 ஆம் திகதி வரை மொத்தமாக ஒரு லட்சத்து ஆயிரத்து 192 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது. 2022 ஆம் ஆண்டில் இதுவரை மொத்தம் 2 லட்சத்து 80 ஆயிரத்து 27 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளதாக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ஒ-இ)

*தடுப்பூசி பெறாதவர்களுக்குத் தடை:*

## வர்த்தமானிக்கு எதிரான மனு உயர்நீதிமன்றால் தள்ளுபடி

கொழும்பு, ஏப். 1

முழுமையான கொவிட் தடுப்பூசிகளை பெறாதவர்கள் பொது இடங்களுக்குச் செல்வதற்கு தடை விதிக்கும் வகையில் வெளியிடப்பட்ட வர்த்தமானியை சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட மனு உயர் நீதிமன்றால் நேற்றுமுன்தினம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஐவரடங்கிய உயர்நீதிமன்ற நீதியரசர் குழாமின் பெரும்பான்மை தீர்மானத்துக்கமைய குறித்த மனு நிராகரிக்கப்பட்டுள்ளது. (ஒ.இ)

## எரிபொருள் விலையை அதிகரிக்க எதிர்பார்க்கவில்லை

கொழும்பு, ஏப். 1

புத்தாண்டு காலத்தில் தடையின்றி எரிபொருள் விநியோகிக்கப்படும். எரிபொருளின் விலையை மீண்டும் அதிகரிக்க தற்போது எதிர்பார்க்கவில்லை.

தேவைக்கேற்ப டீசல், மண்ணெண்ணெய் கையிருப்பில் இல்லாத காரணத்தால் அவற்றின் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜயசிங்க தெரிவித்தார். ஜனாதிபதி ஊடகப் பிரிவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ஒ-இ)

## முன்னாள் அமைச்சர் உயிரிழப்பு

கொழும்பு, ஏப். 1

முன்னாள் அமைச்சர் அதாவுத செனவிரத்ன தனது 91 ஆவது வயதில் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-இ)


## பெயர் மாற்றம்

புங்குடுதீவைச் சேர்ந்த மரிய விரான்சிஸ்கா ஆகிய நான் எனது பெயரை இன்று முதல் மேரி பிரான்சிஸ்கா எனப் பெயர் மாற்றி இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் எனவும் அவ்வாறே கையொப்பம் இடுவேன் எனவும் இத்தால் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசிற்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

மேரி பிரான்சிஸ்கா


# நிலைபேறான திட்டம்தான் நாட்டைக் கட்டியெழுப்பும்

## *பிரிட்டன் பிரதிநிதியிடம் சுட்டிக்காட்டினார் சஜித்*



கொழும்பு, ஏப். 1

தற்போதைய நெருக்கடியிலிருந்து நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கு நிலைபேறான மற்றும் திட்டமிடப்பட்ட வேலைத்திட்டம் அவசியம் எனவும் அதனை சாத்தியப்படுத்த சரியான வழிகாட்டுதல் தேவை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டினார்.

பிரித்தானிய கன்சர்வேட்டிவ் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் பிரிட்டன் நாடாளுமன்றத்தின் முன்னாள் பிரதி சபாநாயகருமான மைக்கல் மொரிஸுடன் இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் இவ்வாறு சுட்டிக்காட்டினார். தவறான நடவடிக்கைகள் காரணமாக நாட்டின் பொருளாதாரம் உட்பட அனைத்தும் பெரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளன என்றும் சஜித் அவரிடம் தெரிவித்தார். (ம)


## 3ஆம் ஆண்டு நினைவு

மலர்வு 16 . 06 . 1947

உதிர்வு 05 . 04 . 2019



### மகாதேவன் நாகேஸ்வரி

எங்கள் அன்புத் தாயே!
ஆண்டு மூன்று மறைந்தாலும் ஆறிடுமோ
எங்கள் துயரம் அம்மா. நிழல் தந்து
எமை வளர்த்து நிலைத்து மண்ணில்
வாழ வைத்து உறுதியுடன் எமைக் காத்த
எங்கள் அன்புத் தெய்வமே!
உமது பிரிவினால் துடிதுடிக்கின்றோம்.

உறவென்ன உற்றாரென்ன ஏன் ஊராரும் வியக்கும்
எங்கள் குடும்பச் சொத்தே!
என்னவென்று சொல்வது உமது சேவையை
ஏங்கித் தவிக்கின்றோம். எங்கள் மாணிக்கமே!
மண்ணிலே மீண்டும் வந்து பிறவீர்களோ!
மறுபடியும் எம்மோடு கலந்து வாழ்வீர்களோ!

அம்மா என்று அழைத்த எங்கள் தெய்வமே!
ஒன்றல்ல இரண்டல்ல ஓராயிரம் வார்த்தை சொல்லும்
ஓயாமல் உழைத்திட்ட எங்கள் உத்தமரே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

இன்று (01.04.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் மகனின் இல்லத்தில் சமய நிகழ்வுகளும் அதனைத் தொடர்ந்து மதிய போசனமும் நடைபெறும். அதில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

196, காரைநகர் வீதி,
வில்லூண்டி பிள்ளையார் கோவில்,
யாழ்ப்பாணம்.

நினைவுகளுடன்:
உங்களது பாசமிகு மகன்
ம.அமிர்தலிங்கம்

(CS 18071)1-6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கான உதவி தொடரும்

## சவுதி தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.1

**இலங்கைக்கான சவுதி அபிவிருத்தி நிதியத்தின் உதவிகளைத் தொடர்ந்தும் வழங்க உத்தேசித்துள்ளோம் என்று இலங்கைக்கான சவுதி தூதுவர் அப்துல் நாசர் ஹுசைன் அல் ஹார்தி, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் தெரிவித்தார்.**

தனது சேவைக்காலத்தை முடித்து, நாட்டில் இருந்து வெளியேறிச் செல்லும் அப்துல் நாசர், ஜனாதிபதி கோத்தாபயவைச் சந்தித்தபோதே இதனைத் தெரிவித்தார்.

புதுப்பிக்கத்தக்க வலுசக்தி துறையில் முதலீடு மற்றும் இலங்கையில் உள்ள ஏனைய முதலீட்டு வாய்ப்புக்கள் குறித்து ஆராய்வதற்காக சவுதி அரேபிய உயர்மட்டக் குழுவொன்று விரைவில் இலங்கைக்கு வருகை தரும் என்று தூதுவர் தெரிவித்தார். முதலீட்டு வலயங்களுடன் தொடர்புடைய பல சிறப்பு வரிச் சலுகைகள் உள்ளன. மருந்து, தொழில்நுட்பம் மற்றும் ஆடைத் தொழில் துறைகளில் நேரடி முதலீட்டுக்கான பரந்த வாய்ப்புக்கள் இலங்கையில் உள்ளன. கொழும்பு துறைமுக நகர் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள உத்தேச கப்பல் பழுதுபார்ப்பு மற்றும் உற்பத்தி நிறுவனத்துடன் தொடர்புடைய முதலீட்டு வாய்ப்புக்களில் முதலீடு செய்யுமாறு சவுதி அரசாங்கத்துக்கு அழைப்பு விடுத்த ஜனாதிபதி, சவுதி அபிவிருத்தி நிதியத்தின் மூலம் இந்த நாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கு வழங்கிய உதவிக்கும் நன்றி தெரிவித்தார். (ஒ-4-இ)



## மின்பிறப்பாக்கி பழுது இருளில் மருத்துவமனை

யாழ்ப்பாணம், ஏப்.1

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் பொருத்தப்பட்ட மின்பிறப்பாக்கி பழுதடைந்தமையால், கடந்த செவ்வாய்க்கிழமை இரவு மின்தடைப்பட்ட தருணத்தில் மருத்துவமனை இருளில் மூழ்கியது.

மின் துண்டிப்பு ஏற்பட்ட தருணம், அங்கு பொருத்தப்பட்டிருந்த மின்பிறப்பாக்கி இயங்க மறுத்தத்ன் காரணமாக, கைத்தொலைபேசி வெளிச்சத்தின் மூலமே சேவைகள் முன்னெடுக்கப்பட்டன.

மருத்துவமனையின் மின்பிறப்பாக்கி உரிய முறையில் பராமரிக்கப்படாமை குறித்து விசனம் தெரிவிக்கப்பட்டது. (ஒ-4-20)



## 10,000 ரூபாவுக்குப் பொருள்களை கொள்வனவு செய்தாலே எரிவாயு

கிளிநொச்சி, ஏப்.1

கிளிநொச்சியில் 10 ஆயிரம் ரூபாவுக்குப் பொருள்கள் கொள்வனவு செய்பவர்களுக்கே சமையல் எரிவாயு விநியோகிக்கப்படுகின்றது.

10 ஆயிரம் ரூபாவுக்குப் பொருள்கள் கொள்வனவு செய்தால் எரிவாயு விநியோகிக்கப்படும் என்று சில விற்பனையாளர்கள் கூறுவதால் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

எனினும் மக்களுக்குத் தேவையான எரிவாயு சிலிண்டர்கள் வர்த்தக நிலையங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன என்று விநியோகஸ்தர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-4-113)

## மோட்டர் திருட்டு



யாழ்ப்பாணம், ஏப்.1

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்கானை சிவப்பிரகாச இந்து ஆரம்பப் பாடசாலையில் மோட்டர் இயந்திரம் திருடப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாடசாலை வார விடுமுறையை அடுத்து, கடந்த திங்கட்கிழமை பாடசாலைக்குச் சென்று பார்வையிட்ட போதே மோட்டர் இயந்திரம் திருடப்பட்டமை தெரியவந்தது.

இதனையடுத்து பாடசாலையின் அதிபர் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டார்.

முறைப்பாட்டுக்கமைய மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஒ-14-125)

## குரங்குகள் தொல்லை; நோயாளர்கள் அவதி

சாவகச்சேரி, ஏப்.1

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் குரங்குகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது என நோயாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மருத்துவமனை வளாகத்தில் நடமாடும் குரங்குகளின் தொல்லையால், அங்கு தங்கி சிகிச்சைபெறும் சிறுவர்கள் மற்றும் நோயாளர்கள் அவதியுறுகின்றனர் என்றும் அவர்களின் உடைமைகளை குரங்குகள் தூக்கிச் செல்கின்றன என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் குரங்குகளை விரட்ட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-9)

## வாகன இலக்கத்தகடுகள் தயாரிக்க தீர்மானம்

இலங்கையில் முதன்முறையாக கொலன்னாவையில் உள்ள அரச தொழிற்சாலை ஊடாக வாகன இலக்கத்தகடுகளை தயாரிக்க தீர்மானித்துள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. நாட்டின் அந்நியச் செலாவணி இருப்பைத் தக்க வைத்துக்கொள்ளும் நோக்கில் பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் ஆலோசனைக்கமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ஒ-14)



'நூறு மலர்கள் மலரட்டும்' என்ற தலைப்பில் புத்தக அரங்கப் பெருவிழாவின் முதல்நாள் நிகழ்வுகளான சிவசேகரம் கவிதைகள் நூலின் அறிமுக நிகழ்வு மற்றும் சிறுவர் அரங்க விழா யாழ்ப்பாணம் தேசிய கலை இலக்கியப் பேரவையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ய)

## வவு. கூமாங்குளத்தில் முதிரைக் குற்றிகள் மீட்பு

வவுனியா, ஏப்.1

வவு.கூமாங்குளத்தில் 10 இலட்சம் ரூபா பெறுமதியான முதிரைக் குற்றிகள் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பண்டாரிக்குளம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய கூமாங்குளத்திலுள்ள வெற்றுக்காணியில் 18 மரக்குற்றிகள் மீட்கப்பட்டதுடன் அந்தப் பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய சந்தேகநபரையும் கைது செய்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பண்டாரிக்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஒ-14-110)



## கொழும்பு தேசிய மருத்துவமனை ஆய்வக சேவைகளுக்கு மட்டுப்பாடு

கொழும்பு தேசிய மருத்தவமனையின் அனைத்து ஆய்வக சேவைகளையும் மட்டுப்படுத்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில், கொழும்பு தேசிய மருத்துவமனையின் நிர்வாக அதிகாரியால், சம்பந்தப்பட்ட பிரதானிக்குக் கடிதம்மூலம் அறியப்படுத்தப்பட்டுள்ளது. மருந்துத் தட்டுப்பாடு காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை நாடு முழுவதிலும் உள்ள பல மருத்துவமனைகளில் புற்றுநோய், இருதய மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்காக பயன்படுத்தப்படும் மருந்துகள் பெருமளவு முடிவடைந்துள்ளன என்று அரச ஔடதவியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள், மேலும் பல மருந்துகள் தீர்ந்துவிடும் என்றும் அந்தச் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (ஒ-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

நாளொரு நல்வார்த்தை

''மகிழ்ச்சியைத் தேடாதீர்கள். ஆனால் மகிழ்ச்சியாக இருக்க சதாகாலமும் தயாராக இருங்கள்'' - ரஸ்கின்

## திட்டமிட்டு வினையாற்றுக!

மின்சார நெருக்கடியை ஓரளவுக்கேனும் சமாளிப் பதற்கு, 'வீட்டில் இருந்து வேலை' என்ற திட்டத்தை மீண்டும் கையிலெடுக்க வேண்டும் என்று பொதுப் பயன்பாட்டு ஆணைக் குழு பரிந்துரைத்துள்ளது. அமைச்சர்கள் சிலரும், துறைசார் அதிகாரிகளும் இந்தத் திட்டத்துக்குப் பச்சைக்கொடி காட்டியுள்ளனர். குறிப்பாக பிரதமர் அலுவலகத்தில் 'வீட்டில் இருந்து வேலை' என்னும் திட்டம் மீண்டும் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. அதே போன்று ஏனைய அரச திணைக்களங்களிலும் 'வீட்டில் இருந்து வேலை' என்ற திட்டத்தை கொண்டுவர அரசாங்கம் தீவிரமாக பரிசீலித்து வருகின்றது. இந்த நிலையில் தொலைத்தொடர்பு கோபுரங்கள் படிப்படியாக செயலிழக்கும் அபாய அறிவிப்பு இடியாக இறங்கியிருக்கின்றது. இதனால் இணைய சேவைகள் முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளதால் 'வீட்டில் இருந்து வேலை' திட்டமும் எந்தளவு தூரம் சாத்தியமானது என்ற கேள்வி எழுந்துள்ளது.


நீண்டநேர மின்வெட்டுக்களால் தொலைத்தொடர்பு கோபுரங்களின் மின்தேக்க இயலுமை பாதிக்கப்பட்டு அவை செயலிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதை மெய்ப்பிக்கும் வகையில் இப்போதே பல இடங்களில் இணைய சேவைகளின் வேகம் சடுதியாகக் குறைந்துள்ளது. சாதாரண இணையப்பாவனைக்கே பயநர்கள் சிரமப்படும் முறைப்பாடுகள் சமூக வெளிகளில் கொட்டிக்கிடக்கின்றன.

மின்சார நெருக்கடியால் இந்த நாடு எதிர்கொண்டுள்ள பின்னடைவுகள் ஏராளம். அதைச் சொல்லித்தான் தெரிய வேண்டும் என்பதல்ல. ஆனால், இந்த இடர்நிலை தொலைத்தொடர்பிலும் தாக்கம் செலுத்துமாக இருந்தால் அதன் விளைவுகள் பெரியனவாகவே இருக்கும். இலங்கையின் நிர்வாக அலகில் சொல்லிக்கொள்ளும் படியான கனதியான எதிர்மறைத் தாக்கங்களை உண்டுபண்ணிவிடக்கூடிய விடயம் இது.

சூம் செயலி வழியான கலந்துரையாடல்கள் கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக நடைமுறைப்படுத்தப்பட்டு, அதன்பின்னர் பல நிறுவனங்களின் நிர்வாக நடவடிக்கைகளில் பரிச்சயமாகிவிட்டனவாகவும் தவிர்க்க முடியாதனவாகவும் மாறிவிட்டன. இது வொருபுறமிருக்கையில் மீண்டும் வீட்டில் இருந்து வேலை என்பது நடைமுறைப்படுத்தப்பட்டால் இணையம் அத்தியாவசியமான தொன்றாக பல விடயங்களில் மாறிவிடும். இப்படியான பின்னணியில் தொலைத்தொடர்பு கோபுரங்களும் படிப்படியாக செயலிழக்குமாக இருந்தால், அது ஆகப்பெரும் விளைவுகளை நாட்டில் ஏற்படுத்தவே செய்யும் என்பதற்கு இரண்டாவது கருத்து இருக்க முடியாது.

ஒரு பிரச்சினைக்குத் தீர்வைக்காணப்போய் 'டிசைன் டிசைனாக' பல பிரச்சினைகளைத் தோற்றுவிப்பது கோத்தாபய அரசுக்குப் புதிதல்ல. இரசாயன உரம் உடலுக்கு கெடுதியை ஏற்படுத்துகின்றது. இதனால் இரசாயன உரத்தை இறக்குமதி செய்யத்தடை என்று கடந்த பெரும்போகத்தின்போது அரசாங்கம் அறிவித்தது. பல்வேறு எச்சரிக்கைகளையும் மீறி, திட்டமிடப் படாத வகையில் வெளிவந்த இந்த அறிவிப்பால் விளைச்சல் குறைந்து உணவுப்பற்றாக்குறை ஏற்பட்டது. பின்னர் இந்த உணவுப் பற்றாக்குறையைப் போக்குவதற்காக எந்த இரசாயன உரத்தைத் தடைசெய்ததோ அதே உரத்தில் விளைவிக்கப்பட்ட உணவுகளை பெருந்தொகை கொடுத்து நாட்டுக்குள் இறக்குமதி செய்தது. அவ்வளவு 'வித்துவத்தனம்' கொண்ட அரசாங்கம் இது. இப்போதும் அதுபோன்றதொரு சம்பவம்தான் இடம்பெறப் போகின்றதோ என்ற சந்தேகம் வலுவாகவே எழுகின்றது.

எரிபொருள் பிரச்சினைக்கும் மின்தட்டுப்பாட்டுக்கும் தீர்வைக் காண்பதற்காக 'வீட்டில் இருந்து வேலை' என்ற திட்டத்துக்கு மீண்டும் உயிர் கொடுக்கும் பட்சத்தில் தொலைத்தொடர்பு கோபுரங்களின் சேவையை இந்த அரசாங்கம் சரிவர உறுதிப்படுத்தவேண்டும். அதைவிடுத்து 'வீட்டில் இருந்து வேலை' என்ற திட்டத்தை நடைமுறைப்படுத்திவிட்டு, தொலைத் தொடர்பு கோபுரங்களின் சேவையை உறுதிப்படுத்தத் தவறினால் இருந்ததையும் இழந்த கதையாகத்தான் அது மாறிவிடும்.




# இலங்கைக்கு உதவி வழங்க இந்தியா பாடுபடுகின்றது

## வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவிப்பு

**கொழும்பு, ஏப். 1**

**இலங்கைக்கு உதவிகள் விரைவில் கிடைப்பதை உறுதி செய்வதற்காக இந்தியா அதிகளவு நேரத்தை செலவிடுகின்றது என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.**

இலங்கையில் உள்ள இந்தியப் பத்திரிகையாளர்களுடன் கருத்துப் பரிமாற்றத்தில் ஈடுபட்டவேளை அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் நெருங்கிய அயல்நாடு இந்தியா. இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடியை நல்ல அயலவனைப்போல நாங்கள் விவேகமான முறையில் அணுகுகின்றோம். அரசியலை தவிர்த்துள்ளோம். இலங்கை தனது மோசமான நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளவேளையில் இலங்கைக்கு நேரமே மிக முக்கியமானது. இலங்கைக்கான தனது உதவிகளை துரிதப்படுத்துவதற்காக இந்தியா மேலதிக நேரத்தை செலவிடுகின்றது. இவ்வாறான சூழ்நிலையில் வழமையான வேகத்தில் நடவடிக்கைகளை எடுக்கமுடியாது. முன்னர் பல வாரங்கள் நீடித்தி ருக்கக்கூடிய நடவடிக்கைகளை தற்போது ஒரு சில நாள்களில் பூர்த்தி செய்கின்றோம்.

இந்தியா - இலங்கைக்கு வழங்கியுள்ள கடனுதவிகள் உட்பட நிதி உதவிகளைப் போன்று வேறு ஒரு நாட்டுக்கும் உதவி புரிந்ததாக எனக்கு நினைவில்லை - என்றார் ஜெய்சங்கர். (ஒ-இ)

## தீவுகளில் மின் உற்பத்தி; இந்தியா 75 சதவீத மானியம்

கொழும்பு, ஏப். 1

யாழ்ப்பாணத்தில் 3 தீவுகளில் முன்னெடுக்கப்படவுள்ள புதுப்பிக்கத்தக்க சக்தி மூலமான மின் உற்பத்தி திட்டத்துக்கு இந்தியாவிடமிருந்து 75 வீத நிதி மானியமாக கிடைக்கப் பெறுகின்றது என்று மின்சக்தி அமைச்சர் பவித்ராதேவி வன்னியாராச்சி தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது, ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியாவின் கடன் உதவியுடன், இந்தத்திட்டத்துக்கு மானியமும் கிடைக்கப்பெறுகின்றது. 75 வீதம் கிடைக்கவுள்ள மானியத்தை 85 வீதமாக அதிகரித்துக்கொள்வதற்கான பேச்சையும் ஆரம்பிக்கவுள்ளோம்.

இந்தத் திட்டத்துக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் இருந்து கடன்பெறுவதற்கு திட்டமிடப்பட்டது. எனினும், இந்தியாவிடம் இருந்து 75 வீத நிதி மானியமாக கிடைக்கப்பெறுகின்றது - என்றார்.

அதேவேளை, நல்லாட்சியின்போது 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை 4 மணிநேரம் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. எரிபொருள் பிரச்சினை இருக்கவில்லை. இப்படியான நெருக்கடி நிலைமையும் இருக்கவில்லை. எனினும், வறட்சியால் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. எமது ஆட்சிக்கு பிறகு புதிதாக மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்படாததால்தான் இந்நிலைமை ஏற்பட்டது. சம்பூரை ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டோம். அதற்குள் ஆட்சி மாறிவிட்டது. உமா ஓயா திட்டத்தை இவ்வருடத்துக்குள் திறப்போம். அதன்பின்னர் யுகதனவி எல்.என்.ஜி. திட்டமும் செயற்படுத்தப்படும் - என்றார். (ஒ-44)

நாளை 02.04.2022 சனிக்கிழமை பங்குனி 19

சுபநேரம் : 03.11 - 04.41

ராகுகாலம்: 09.11 - 10.41

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஏப். 1
நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திர சேகரப்பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் 10ஆம் திகதி மஞ்சத் திருவிழாவும் 11ஆம் திகதி கைலாசவாகனத் திருவிழாவும் 13ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் 14ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 15ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன என்று நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஒ-14)

# "பட்டினிச் சாவில் எம்மை தள்ளாதே"

### மாக்சிச லெனினிசக் கட்சி கவனவீர்ப்புப் போராட்டம்

**வவுனியா, ஏப்.1**
**தற்போதைய விலைவாசி அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி ஏற்பாட்டில் வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் நேற்று மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**




இதன்போது "கோத்தா - மஹிந்த அரசே எம்மைக் கொல்லாதே", "விலையை உயர்த்தி சாவடிக்காதே", "சர்வதேச நாணய நிதியத்திடம் நாட்டை விற்காதே", "நாட்டு மக்களை ஏமாற்றிப் பிழைக்காதே", "தள்ளாதே தள்ளாதே பட்டினிச் சாவில் தள்ளாதே" போன்ற பல கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் எரிபொருள்கள், எரிவாயு, பானைகள், மின்சார உபகரணங்கள் போன்ற சமையல் உபகரணங்களை தாங்கியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியினர், அரசியல் பிரமுகர்கள் , பொதுமக்கள் எனப் பலர் பங்குபற்றினர். (ச-110,18)

## சிவபுரத்தில் சடலம் மீட்பு

வவுனியா, ஏப்.1
வவுனியா, சிவபுரம் பகுதியிலுள்ள ஆலயம் ஒன்றிலிருந்து தவறான முடிவெடுத்து உயிரிழந்த ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அப்பகுதியிலுள்ள கிறிஸ்தவ தேவாலயத்தினுள் தூக்கில் தொங்கிய நிலையில் ஒருவரின் சடலம் காணப்படுகிறது எனப் பொதுமக்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் குறித்த சடலத்தை மீட்டுள்ளனர்.

உயிரிழந்தவர் 35 வயது மதிக்கத்தக்கவர் எனவும் சடலத்தின் அருகே பயணப் பொதியொன்றும் காணப்படுகிறது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் இதுதொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ச-18)

## சனசமூக நிலையம் சரிவர இயங்குகிறது

### *குட்மன் சனசமூக நிலையம் தன்னிலை விளக்கம்*

கொடிகாமம், ஏப். 1
எமது சனசமூக நிலையம் சரிவர இயங்குகின்றது. சிலர் திட்டமிட்டுக் களங்கள் ஏற்படுத்தும் வகையில் சனசமூக நிலையத்துக்கு எதிராகச் செயற்படுகின்றனர் என்று தன்னிலை விளக்கமளித்துள்ளது குட்மன் சனசமூக நிலையம்.

மந்துவில் வடக்குப்பகுதியில் அமைந்துள்ள சனசமூக நிலையம் ஒன்று ஒழுங்காக இயங்கவில்லை என்று சிலர் முன்வைத்த குற்றச்சாட்டுத் தொடர்பில் உதயனின் கடந்த 19ஆம் திகதிய பதிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதையடுத்தே மேற்படி குட்மன் சனசமூக நிலையம் தன்னிலை விளக்கமளித்துள்ளது.

பத்திரிகைகள் சனசமூக நிலையத்தில் தவறாது வைக்கப்படுகின்றன, சனசமூக நிலையத்தின் நிர்வாகச் சேவைகள் சரியாக முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால் சிலர் சனசமூகத்துக்கு அவப்பெயர் ஏற்படும் வகையில் செயற்படுகின்றனர்.

இவ்வாறு உண்மைக்குப் புறம்பான தகவல்களை வெளியிடுகின்றனர் என்று அந்த சனசமூக நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-159)

## வடக்கில் அரச காணிகளை பெற்றுக்கொண்டோருக்கான அறிவித்தல்

யாழ்ப்பாணம், ஏப். 1
வடமாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் அரச காணிகள் பெற்றவர்களுக்கு அரச காணி சட்ட விதி தொடர்பான அறிவித்தல் வடமாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திர காணியை அனுமதிப்பத்திரகாரர் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்துக்கு முரணாக விற்பனை ஒப்பந்தம், விற்பனைக்கடிதம் மற்றும் நொத்தாரிசு உறுதி ஆகியவற்றின் மூலம் கைமாற்றம் செய்தல், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திர காணிகளை குடியிருப்பு மற்றும் விவசாய நோக்கம் தவிர்ந்த வர்த்தக நோக்கத்துக்காக பயன்படுத்தல்,

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திர காணிகளை பிரதேச காணி செயலாளரின் அனுமதியின்றி உத்தரவு பெற்ற நில அளவையாளர் மூலம் நில அளவை மேற்கொள்ளல், அரச காணியை அனுமதியின்றி நில அளவை செய்தல்,

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புக் காணிகளுக்கு அளிப்பில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு மாறாக பிரதேச செயலாளரின் அனுமதியின்றி நொத்தாரிசு உறுதி மூலம் பிரிவிடல் செய்தல் மற்றும் உரிமை மாற்றம் மேற்கொள்ளல், குத்தகையில் வழங்கப்பட்ட காணிகளுக்குரிய குத்தகைப் பணத்தை முறையாக செலுத்தாதிருத்தல் மற்றும் முறையான அனுமதியின்றி காணிகளை பிரிவிடல் செய்து உரிமை மாற்றம் என்பவற்றை நொத்தாரிசு உறுதி மூலம் மாற்றம் செய்தல், அரச காணிகளை அத்துமீறிப் பிடித்து ஆவணமின்றி குடியிருந்து வருபவர்கள் காணியின் ஒரு பகுதியையோ அல்லது முழுமையாகவோ வேறு நபர்களுக்கு விற்பனை செய்தல், பகிர்ந்தளிக்கப்பட்ட அரச காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றாதிருத்தல், அரசு ஒதுக்கீட்டுக்குரிய காணிகளை அத்துமீறிக் கைப்பற்றுதல் ஆகியனவே காணியின் சட்ட விதிகளாகும்.

இவ்வாறான சட்டத்துக்கு முரணான காணி நடவடிக்கைகள் தொடர்பில் எமது திணைக்களத்தால் உறுதிப்படுத்தப்படும் போது குறித்த காணிகள் தொடர்பாக காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம், அரச காணி கட்டளைச் சட்டம் ஆகியவற்றின்கீழ் அந்தக் காணியை அரசால் மீளப் பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஒ-14)

## கற்கைநெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஏப். 1
யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியின் 2022 கல்வியாண்டுக்கான கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்கமைய திறன்சார் கற்கைநெறிகளான இலத்திரனியல், கைத்தொழில்துறை மின்னியலாளர், மோட்டார் வாகனத்தொழில்நுட்பவியலாளர், நீர்க்குழாய் பொருத்துநர், அலுமினியப்பொருள் உருவமைத்தல், வீட்டு பாவனை மின் உபகரணங்கள் திருத்துநர், மரக் கைப்பணி தொழில்நுட்பவியலாளர் (கட்டடம்), மோட்டார் வாகன உருக்செப்பனிடல், மோட்டார் வாகன வர்ணம் பூசுநர், பொறியீட்டு சான்றிதழ், வில்லுருக்கிஒட்டுனநர், ஆபரண உற்பத்தி கற்கை நெறி ஆகியவற்றுக்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்களுக்கும் என்.சி.ரி, என்.வி.கியூ 5 பகுதி நேரக் கற்கை நெறிகளான குடிசார் எந்திரவியல், கணிய அளவையியல், மின்னியல் மற்றும் இலத்திரனியல், மோட்டார் வாகன தொழில்நுட்பவியல் ஆகியவற்றுக்கு க.பொ.த (சா/த) கணிதம், விஞ்ஞானம், தமிழ் உட்பட 6 பாடம் அல்லது என்.வி.கியூ 3,4 தகைமைகளுடனும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கற்கைநெறிகளுக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு 4 ஆயிரம் ரூபா வரையான விசேட கொடுப்பனவுடன் உள்நாட்டு, வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இந்தக் கற்கை நெறிகள் அமைந்துள்ளன.

அத்துடன் திறன்சார் கற்கைநெறிகளுக்கு மேலதிகமாக மாணவர்களை உள்வாங்கக்கூடியதாக உள்ளதால் விண்ணப்பிக்க விரும்புவோர் உடனடியாக விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14)

## மன்னார் மாவட்டத்தின் அபிவிருத்தி ஆராய்வு

மன்னார் மாவட்டத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டன.

மன்னார் மாவட்டத்தின் 2022ஆம் ஆண்டுக்கான அபிவிருத்திக்குழுக் கூட்டம் மன்னார் மாவட்டச் செயலர் திருமதி அ. ஸ்ரான்லி டிமெல் தலைமையில் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானின் இணைத் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது கல்வி, விவசாயம், மீன்பிடி, போக்குவரத்து போன்ற விடயங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டன.

அதில் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் பின்தங்கிய கிராமங்களிலிருந்து மாணவர்கள்,ஆசிரியர்கள் பாடசாலைக்குச் செல்வதற்கான போக்குவரத்து வசதி இன்மை ஆகியவை தொடர்பில் வலயக் கல்வி அதிகாரியால் சுட்டிக்காட்டப்பட்டது.

போக்குவரத்து பிரச்சினைக்கு மன்னார் மாவட்டச் செயலர் தலைமையில் தனியார் மற்றும் அரச போக்குவரத்து சபையினருடன் கலந்துரையாடலை மேற்கொண்டு தீர்வுகள் காணப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், ரிஷாத் பதியுதீன், குலசிங்கம் திலீபன் மற்றும் திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** இன்று புண்ணிய செயல்களில் குடும்பத்துடன் ஈடுபடுவீர்கள். புதிய முதலீட்டைத் தவிர்ப்பது நல்லது. குதூகலமான நாள். எதிர்பார்த்த முன்னேற்றம் இருக்கும். அமைதியான நாள்.

**இடபம்:** பிள்ளைகளால் மகிழ்ச்சி கூடும். உங்களுக்கு பாராட்டு கிடைக்கும். நீண்டநாள் பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள். உங்களின் திட்டம் நிறைவேறும். ஆன்மிக நாட்டம் கூடும்.

**மிதுனம்:** பொதுநல உணர்வு மேலோங்கும். யாரிடமும் வீண் பிரச்சினை வேண்டாம். சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தைப் புரிந்து கொள்வீர்கள். புதிய அனுபவப் பாடம் பெறுவீர்கள்.

**கடகம்:** தடைகளைத் தகர்த்தெறிய சிறப்பாக முயற்சி செய்வீர்கள். புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்ள ஆர்வமாக இருப்பீர்கள். பணிச்சுமை காரணமாகப் பொறுப்பை மற்றவரிடம் விடாதீர்கள்.

**சிம்மம்:** சிக்கலை உண்டாக்கும் எந்த செயலையும் செய்யவேண்டாம். உற்சாகம் மிகுந்த நாள். எதைப் பற்றியும் கவலைப்பட மாட்டீர். மற்றவர்களுக்கு உதவினாலும் அவப்பெயர் கிடைக்கக்கூடும்.

**கன்னி:** தெய்வ பலம் கூடும் நாள். நிதி நிலை சீராகும். சிந்தித்து முடிவெடுத்து பிரச்சினையில் இருந்து வெளியே வருவீர்கள். உங்களின் கனவுகள் நனவாக சிறிது காலம் பொறுங்கள்..

**துலாம்:** பணி சிறக்கும். மற்றவர்களின் நலனுக்காகப் பாடுபடுவீர்கள். பிறரது பேச்சுக்கு அதிக மதிப்பு அளிக்க வேண்டாம். எதிர்பார்த்த முன்னேற்றம் கிடைப்பதில் தாமதம் இருக்கும்.

**விருச்சிகம்:** சிறிய அளவில் சுபச் செலவு செய்யவேண்டிவரும். நல்ல காலம் பிறந்துவிட்ட அடையாளம் இன்று தெரியவரும். வீட்டிலும், வெளியிலும் நிம்மதி கூடும். சுறுசுறுப்பான நாள்.

**தனுசு:** பொறுமை அவசியம். குடும்பத்தில் இருந்த பிரச்சினை தீரும். சிலரை நம்புவதற்கில்லை என்பதை உணர்ந்துகொள்வீர்கள். உணர்ச்சி வசப்படுவதைத் தவிர்ப்பது நல்லது.

**மகரம்:** பிரியமானவர்களின் அன்பைப் பெறுவீர்கள். சிறுசிறு சிரமங்கள் இருந்தாலும் உற்சாகம் குறையாது. பணியாளர்கள் பிறரிடம் நிதானத்துடன் பேசவேண்டும்.

**கும்பம்:** பயணத்தில் சிறு தடை ஏற்பட்டாலும் வெற்றிகரமாக நிறைவேறும். குடும்பத்தில் இருந்து வந்த சங்கடமான சூழல் மாறும். திருமண வயதில் உள்ளவர்களுக்கு நல்ல வரன் அமையும்.

**மீனம்:** பிள்ளைகளுக்கு திருமணம் ஏற்பாடாக வாய்ப்புள்ளது. நண்பர் ஒருவர் மூலம் உங்களது வாழ்வில் முன்னேற்றம் வரும். வருமானம் கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும்.



# இரு தலைகள், 3 கைகளுடன் ஆண்குழந்தை

புதுடில்லி, ஏப்.1

இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் இரண்டு தலைகள் மற்றும் மூன்று கைகளுடன் ஆண் குழந்தை ஒன்று பிறந்தமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

மத்திய பிரதேசத்திலுள்ள ஜஓரா பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் கருத்தரித்த பின் ஸ்கான் செய்துபார்த்த போது இரட்டைக் குழந்தை பிறக்கும் என மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

இந்நிலையில் அந்தப் பெண்ணுக்கு இரண்டு தலைகள், 3 கைகளுடன் ஆண் குழந்தை பிறந்துள்ளது.

இது குறித்து குழந்தைநல அறுவைச் சிகிச்சை நிபுணர் கூறுகையில்,

ஒரு உடலில் இரண்டு தலைகள் அருகருகே இருக்கும் இதுபோன்ற நிலை மிகவும் அரிதானது. இவ்வாறு பிறக்கும் குழந்தை உயிர்பிழைப்பது நிச்சயமற்றது. இந்தக் குழந்தைக்கு அறுவைச் சிகிச்சை செய்வது குறித்து இதுவரை திட்டமிடவில்லை- என்றார். (ச-இ)



சீனாவின் ஷங்காய் நகரில் கொரோனாத் தொற்று அதிகரித்துவரும் நிலையில் ஊடரங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் கட்டுப்பாடுகளும் கடுமையாக்கப்பட்டுள்ளன. மனிதர்கள் மட்டுமின்றி, வளர்ப்புப் பிராணிகளையும் வெளியே அழைத்து வரத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

'ஓம் விராட் விஸ்வப் பிரமனே நம'

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (02.03.2022) புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

**அமரர்**

## அற்புதராணி கந்தசாமி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (01.04.2022) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் அதனைத்தொடர்ந்து வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும்.

ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வு நாளை (02.04.2022) சனிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

குடும்பத்தினர்.

தோற்றம் 19.01.1950 — மறைவு 02.03.2022

# மரண அறிவித்தல்



தோற்றம் 17 . 04 . 1951 — மறைவு 29 . 03 . 2022

## திருமதி கந்தையா பரமேஸ்வரி

ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும், கட்டுவன் தண்ணீர்தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பத்தின் குலவிளக்கு கந்தையா பரமேஸ்வரி கடந்த (29.03.2022) இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை கந்தையாவின் அன்பு மனைவியும் அமரர்களான துரையப்பா சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், வேலுப்பிள்ளை தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும், சறோஜினி தேவி, மங்களேஸ்வரி, செல்வரத்தினம், காலஞ்சென்ற உதய குமார் (சுவிஸ்), ஜெயக்குமார் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமரர் சிதம்பரப்பிள்ளை, யோகராசா, கலாசக்தி, வசந்தகுமாரி, கீதா ஆகியோரின் மைத்துனியும், சிவரூபன் (சுவிஸ்), சிவரவி (லண்டன்), சிவரஜி (சுவிஸ்), சிவரமேஸ் (பிரான்ஸ்), சிவரதீஸ் (இலங்கை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சோபனா, ராஜி, குணசீலி, மஞ்சு, தாட்சாயினி ஆகியோரின் அன்பு மாமியாரும், தனுசன், லக்சிகா, யதுராம், மதுசிகா, அபிசன், அரோசன், அசாந், லசாந்தன், கபிஸ், லக்சிகா, அபிசன், ஆகித்யா, அகர்ஷிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2022) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிளான் தெற்கு காடாகடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
077 227 6061

(CR 8195) 1/6

# மரியுபோலில் போர்நிறுத்தம்

கீவ், ஏப்.1

**உக்ரைன், மரியுபோல் நகரிலிருந்து மக்கள் வெளியேற மனிதாபிமான அடிப்படையில் ரஷ்யா நேற்று போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளது.**

மரியுபோல் நகரிலிருந்து வெளியேறும் மக்களை ரஷ்யப் படைகள் தடுத்து வருகின்றனர் என உக்ரைன் குற்றஞ்சாட்டிய நிலையிலேயே ரஷ்யா போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளது. உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து 36 நாள்கள் கடந்துள்ளன. ரஷ்யாவின் தாக்குதலில் உக்ரைனின் துறைமுக நகரான மரியுபோல் முற்றிலும் உருக்குலைந்துள்ளது.

அங்குள்ள மக்கள் அத்தியாவசிய பொருள்களின்றி வெளியேற முடியாமல் தவித்து வருகின்றனர்.

இந்தநிலையில் மரியுபோல் நகரிலிருந்து பொதுமக்கள் பாதுகாப்பாக வெளியேற நேற்று போர்நிறுத்தத்தை ரஷ்யா அறிவித்துள்ளது. மேலும் செர்னோபில் அணு உலையில் இருந்து ரஷ்யப் படைகள் வெளியேறத் தொடங்கியுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 03 . 12 . 1939

உதிர்வு 01 . 04 . 2021

அருட்கலாநிதி 'கலைத்தூது'

## நீ. மரியசேவியர் அடிகள்

(ஸ்தாபக இயக்குநர், திருமறைக் கலாமன்றம்)

பாசமுடன் நேசமுடன்
அரவணைப்புடன் கண்டிப்புடன்
பக்குவமாய் எமை வளர்த்த
அன்புத் தந்தையே
பலமுறை மறக்க முயன்றாலும் - எம்மால்
மறக்க முடியவில்லை தங்கள் அன்பை
மாறா அன்புடன் இன்றும் நீங்கள்
எம்முடன் வாழ்கின்றீர்கள் - என்ற
இனிய நினைவுகளோடு தங்கள் ஆன்மா
இறையமைதியுடன் இளைப்பாற
இறைவனை வேண்டுகிறோம்.

(cs.19146) (2.6)

புனித நீற்றம்மா வீதி,
இளவாலை.

என்றும் நீங்கா நினைவுகளுடன்
சகோதரன் நீக்கிலாப்பிள்ளை
அருளானந்தம்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# ஆதன பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-15 அரசடி வீதி வரிமதிப்பீட்டு இலக்கம் 369.371 என்னும் ஆதன இலக்கத்தைக் கொண்ட ஆதனம் இளையவி பழனித்துரை என்னும் பெயரில் ஆதனப்பதிவேட்டில் காணப்படு கின்றது. இதன் பின்னகத்தான ஆதன அட்டவணையில் நன்கு விபரிக் கப்படும் ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு சிற்றம்பலம் விஸ்வலிங்கம் முகதாவில் 23.03.1959ம் திகதி 4566ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் இளையவி பழனித்துரையும் பெண் அன்னலட்சுமியும் என்பவாகள் மயிலு சண்முகம் மகள் இரத்தினம் என்பவருக்கு நன்கொடையாக வழங் கியுள்ளனர்.

குறித்த ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு அருளம்பலம் இராஜரட்ணம் முகதாவில் 29.06.2011ம் திகதி 7744ம் இலக்க உறுதிப்படுத்தல் உறுதி மூலம் மாதாவழி முதுசமென பழனித்துரை புஷ்பநவகுமார் என்பவர் உறுதிப்படுத்தல் சாசனமாக நிறைவேற்றி கொண்டுள்ளார்.

பின்னர் குறித்த ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு அருளம்பலம் இராஜரட்ணம் முகதாவில் 01.10.2016ம் திகதி 10155ம் இலக்க உறுதிப் படுத்தல் உறுதி மூலம் பழனித்துரை புஷ்பநவகுமார் மகள் றொஷானி என்பவர் பிதாவழி முதுசமாக வந்தடைந்ததாக குறிப்பிட்டு உறுதிப்படுத்தல் சாதனமாக நிறைவேற்றி கொண்டுள்ளார்.

**ஆதனடாப்பு:-** வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை . கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கு இறை நல்லூர் பிரதேசசெயலர் பிரிவில் யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக் குட்பட்ட J/103 ம் இலக்க கிராம அலுவலர் பிரிவில் அமைந்த " நீர்நொச்சியடி" நில பர 1குளி 16.90ம் இது 2003.08.03ம் திகதி நில அளவையாளர் ரி.தங்கராஜா தயாரித்த 4020ம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 2 துண்டு 4 எனச்சுட்டப்பட்ட பகுதிகளாகும். இந்த நிலப்பரப்பு ஒன்று குளி பதினாறு தசம் ஒன்பது சைபரும் அதற்குள் அடங்கிய கடைக்கட்டிடம் கிணறு பகுதியும் இடங்கலும் இதன் எல்லை

**கிழக்கு** :- சிவன் வீதியின் பகுதியும் குறித்த 4020ம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 3 எனச் சுட்டிய ஆதனம்.
**வடக்கு** :- குறித்த படத்தில் துண்டு 1 எனச் சுட்டிய ஆதனம்.
**மேற்கு** :- மாணிக்கம் பசுபதியின் ஆதனமும் பத்மநாதன் சிவமலரது ஆதனம்.
**தெற்கு** :- குறித்த 4020ம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 3 எனசுட்டிய ஆதனமும் வெள்ள வாய்க்காலும் இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்.

தற்போது பழனித்துரை புஸ்பநவகுமார் மகள் றொஷானி இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப் பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருப வர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத் திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமா றும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது பழனித்துரை புஸ்ப நவகுமார் மகள் றொஷானி " என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடியஎப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**கௌரவ முதல்வர்,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.** (cr.37755) (2.6)

## இரட்டைவாய்க்காலில் வெடிபொருள்கள் மீட்பு

முல்லைத்தீவு, ஏப். 1

முல்லைத்தீவு, இரட்டைவாய்க்கால் பகுதி யில் இருந்து கைவிடப்பட்ட வெடிபொருள் கள் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டன.

குறித்த பகுதியில் வெடிபொருள்கள் இருப்பதாக சிறப்பு அதிரடிப்படை யினருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய கைக்குண்டு, சிறிய ரக எறிகணைகள், ஆர்.பி.ஜி. குண்டுகள் ஆகிய வெடிபொ ருள்கள் மீட்கப்பட்டன.

நீதிமன்ற உத்தரவுக்கமைய வெடிபொருள் களை அழிக்கும் நடவடிக்கையில் சிறப்பு அதிரடிப்படையினர் ஈடுபட்டனர்.

(ஓ-14-19-10)


## பதவி வெற்றிடம்

யாழ்நகரில் அமைந்துள்ள பிரபல
Hotel ஒன்றிற்கு முன்னனுபவமுள்ள
House Keeping Staff

076 222 0632, 074 084 0631

## வீடு வாடகைக்கு

நல்லூருக்கு அருகாமையில் (3)மூன்று
பேர் தங்கக்கூடிய சிறிய வீடு
வாடகைக்குண்டு. அரச
உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.

070 521 2109

(cs.19148) (2.6)

## வாடகைக்கு உண்டு

அரியாலை சித்தி விநாயகர் கோவிலுக்கு முன் இருக் கும் அருளம்பலம் ஒழுங்கை, நெடுங்குளம் வீதி 49இல் புதிதாக கட்டப்பட்ட வீட்டின் மாடிப்பகுதி வாடகைக்கு உண்டு. அலுவலகம் ஆகவும் அலுவலக உத்தியோ கத்தவருக்கும் பொருத்தமாக இருக்கும். 3அறைகள், சமையலறை, Hall, Common Bathroom and Hot Water Attach Bathroom முன், பின் பக்க பல்கனி வசதியும் உண்டு.

074 216 8717, 074 223 6815

## வேலையாள்கள் தேவை

சுன்னாகத்தில் இயங்கும் பிரபல
வியாபார நிறுவனத்திற்கு காசாளராகப்
பணிபுரிவதற்கு பெண் வேலையாள்
உடன் தேவை.

076 286 5029

(cs.19149) (2.6)


# 45ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 28 . 12 . 1990

மறைவு 16 . 02 . 2022

கடந்த (16.02.2022) புதன்கிழமை
சிவபதமடைந்த எமது மகள்

## அமரர் அதுசன் தர்சிகா


அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (01.04.2022) வெள்ளிக் கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

குடும்பத்தினர்
(அம்மா)

(cs.19145) (2.6)

# மரண அறிவித்தல்



மண்ணில் 12 . 09 . 1971

விண்ணில் 27 . 03 . 2022

## இம்மானுவேல் நிக்சன் ரஞ்சித்குமார் (ரஞ்சித்)

(குருநகர் யாழ்)

யாழ்ப்பாணம் குருநகரை பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட இம்மானுவேல் நிக்சன் ரஞ்சித்குமார் கடந்த (27.03.2022) அன்று பிரான்சில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அல்பிரட் ஜோசப் இம்மானுவல் (பெனிற்றோ) இமாக்குலேற் (பவா) ஆகியோரின் இளைய மகனும், பிறின்சியின் அன்புக் கணவரும், யாழ்நிலா, ஓவியா, தேவ அமிர்தா (அம்மு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான ஜோசப் சூசன் (மம்மி) இம்மானுவல் மெற்றில்டா (லில்லி) ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற கைடி பொன்கலம் லூட்ஸ் ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்ற அன்ரன் ரவீந்திரகுமார் கிறிஸ்ரியன் ராஜ்குமார், காலஞ்சென்ற கீதாந்தினி, சுஜாந்தினி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், புஸ்பா, விஜிதா, பிரதீப் (சமிந்தன்) டன்ஸ்ரன், லிவிங்ஸ்ரன், பிரின்ஸ்ரன், கிங்ஸ்ரன், சாம்ஸ்ரன் ஆகியோரின் மைத்துனரும், கீதாந்தினி, மகிழன், கரிஸ்ராஜ் ஆகியோரின் சிறிய தந்தையும், இளங்கதிர், ஆதித்தன் ஆகியோரின் பெரிய தந்தையும், பிறேமிகா, யதுர்சான் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.


அன்னாரின் இறுதி நிகழ்வுகள் நாளை (02.04.2022) சனிக்கிழமை பிரான்சில் நடைபெறுவதால் அன்றைய தினம் யாழ்ப்பாணம் புனித யாகப்பர் ஆலயத்தில் மாலை 3.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் அவரின் தாயாரின் வீட்டில் 21 / 1, சின்னக்கடை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நடைபெறும் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
(சகோதரி பிரதீப் சுஜாந்தி)
077 276 7919

(cs.43800) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழ்த் தேசிய இனத்தின் விடிவுக்காய், தன் இறுதி மூச்சுள்ளவரை ஓயாது உழைத்த முன்னாள் ஆயர் இராயப்பு யோசேப் ஆண்டகையின் முதலாம் ஆண்டு நினைவை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**


இராயப்பு யோசேப் ஆண்டகை

# இருபத்தியோராம் நூற்றாண்டு தந்த ஈழத்தமிழினத்தின் இறைவாக்கினர்

அருட்பணி கந்தையா ஜெகதாஸ்
மெதடிஸ்த திருச்சபை

மானிட மாண்பின் காவலரும் மானிட நேயத்தின் மறுபெயருமான மன்னார் மறைமாவட்டத்தின் வாழ்நாள் ஆயர் பேரருட் கலாநிதி இராயப்பு யோசப் ஆண்டகையின் இறைசாட்சிய வாழ்வுக்கும் திருப்பணிக்கும் இறைபாதம் பணிந்து சிரந்தாழ்த்தி நன்றிகூற வேண்டியது எம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

தனியொரு திருச்சபையின் ஆயர் என்பதற்கு அப்பால் அவரின் திருப்பணி பரந்து வியாபித்துள்ளது. கொடூர ஒடுக்குமுறைக்குட்பட்டு சிதைவடைந்து இன அழிப்புக்குட்பட்டு நம்பிக்கையிழந்துபோன ஈழத்தழினத்தின் விடிவுக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்து தமிழின விடுதலையின் செயற்பாட்டாளராகவும் அவர் விளங்கினார்.

உலக தொடர்புகளைத் துண்டித்து ஊடகங்களையெல்லாம் இருட்டடிப்புச் செய்து நிகழ்த்தப்பட்ட முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பின் ஒற்றைச்சாட்சியாக நின்று இன அழிப்புக்கு நீதிவேண்டி உலகின் மனச்சாட்சியைத் தட்டியெழுப்பிய தனது மகத்தான பணியை சாவின் இருள் நிறைந்த புவியில் ஆற்றினார். அவ்வகையில் ஆயர் ஈழத்தமிழினத்தின் இருள் அகற்ற இறைவனால் இவ்வினத்துக்கு வழங்கப்பட்ட மாபெரும் கொடையாவார். அவர் இந்த நூற்றாண்டில் ஈழத்தமிழினம் பெற்ற மோசே ஆவார்.

வரலாறு பல தலைவர்களை உருவாக்குகிறது. ஆனால் சில உயரிய மனிதர்கள் வரலாற்றை உருவாக்குகிறார்கள். அவ்வகையில் ஆயர் இராயப்பு யோசேப்பு புதிய வரலாற்றை உருவாக்கி தனிமனித வரலாறாகத் திகழ்கிறார். இவரால் சமகால வரலாறும் ஈழத்தமிழினமும் பெருமையடைகின்றது. இறைபணி புத்துயிர் பெறுகின்றது. ஆண்டவர் இயேசுவின் விடுதலைப்பணி அர்த்தமுள்ளதாகின்றது.

## பிறப்பும் கல்வியும்

நெடுந்தீவு கிழக்கில் 1940ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி இராயப்பு தம்பதியருக்கு நான்காவது மகனாகப் பிறந்தார். தனது ஆரம்பக்கல்வியை நெடுந்தீவு புனித சவேரியார் வித்தியாலயத்திலும் இடைநிலை, உயர்கல்வியை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியிலும் நிறைவுசெய்தார். குருத்துவ உருவாக்கல் பயிற்சி நெறியை யாழ். மாட்டீனார் சிறிய குருமடத்திலும் இறையில் மெய்யியல் கல்வியை அம்பிட்டிய தேசியகுருமடம் மற்றும் திருச்சி தூய பவுல் இறையியல் கல்லூரியிலும் நிறைவுசெய்து, 1967ஆம் ஆண்டு குருவானவராகத் திருப்பொழிவு செய்யப்பட்டார். பின்னர் உரோமாபுரியில் உள்ள ஊர்பன் பல்கலைக் கழகத்தில் திருச்சபை நியதிச்சட்ட கோட்பாட்டில் கலாநிதிப்பட்டம் பெற்றார்

யாழ். மறை மாவட்டத்தின் பல பங்குகளில் பங்குத்தந்தையாகவும் கொழும்புத்துறை புனித சவேரியார் பெரிய குருமடத்தின் பேராசிரியராகவும் பணியாற்றி, 1992ஆம் ஆண்டு மன்னார் மறைமாவட்டத்தின் இரண்டாவது ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

## குரலற்ற மக்களின் குரல்

ஆயராகப் பொறுப்பேற்ற காலம் தமிழின வரலாற்றில் மிகவும் இடர்மிகுந்ததும் இக்கட்டான காலமுமாகும். அது வடக்கு- கிழக்கு பகுதிகளில் கடும் வன்முறை நிலவிய காலமாக இருந்தது. தமிழ்மக்களுடைய போராட்டம் ஆயுதப்போராட்டமாக மாறியிருந்த சூழலில் மக்கள்மீது போரும் பொருளாதாரத் தடையும் கட்டவிழ்த்து விடப்பட்டு மக்களுக்கு உயிர் ஆபத்தும் உடைமை அழிவுகளும் ஏற்படுத்தப்பட்டன. பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற போர்வையில் பொதுமக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அழிவுகள் மூடிமறைக்கப்பட்டு சர்வதேசத்தை ஏமாற்றி அரசபயங்கரவாதம் தலைவிரித்தாடிய சூழலில் தனியொருவராக நின்று அனைத்து அழிவுகளையும் அநீதிகளையும் வெளிக்கொண்டுவந்து வெளியுலகுக்கு உண்மையை உரைத்தார்.

## மக்களின் துன்பத்தில் பங்கெடுத்த உன்னதன்

எங்கெல்லாம் மக்கள் துன்புற்றார்களோ அங்கெல்லாம் உடன் நேரடியாகச் சென்று மக்களின் துன்பங்களில் பங்கெடுத்து அவர்களின் துயர் துடைத்தார். அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை இடித்துரைத்தார். 2009ஆம் ஆண்டில் வன்னியில் திட்டமிட்டு மானிடப்பேரவலம் நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருந்த காலப்பகுதியில் மக்கள் ஏதிலிகளாய் இடம்பெயர்ந்து சென்று கொண்டிருந்தனர். கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு வெளியில் இருந்து உட்செல்ல அரசால் அனைவருக்கும் தடை விதிக்கப்பட்டிருந்த சூழலில் இடம்பெயர்ந்த மக்கள் புதுக்குடியிருப்பிலே முடக்கப்பட்டு ஷெல்வீச்சுக்களாலும் விமானத்தாக்குதல்களாலும் தொடர்து வகைதொகையின்றி கொல்லப்பட்டுக்கொண்டிருந்த சூழலில் ஆயர் துணிவுடன் தன்னுயிரை துச்சமென மதித்து. அன்று புதுக்குடியிருப்புப் பகுதிக்குச் சென்று மக்களைச் சந்தித்து ஆறுதல்படுத்தி வந்தார். மக்களுக்கு எதிரான தாக்குதல்களை நிறுத்தவும் போர் பிரதேசங்களில் சர்வதேசக் கண்காணிப்புடன் மோதல் தவிர்ப்பு வலயங்களை ஏற்படுத்தி மக்களைப் பாதுகாக்க வெளிநாட்டு தூதரகங்களையும் சர்வதேச நாடுகளையும் இடையறாது தொடர்புகொண்டு கடும் முயற்சி எடுத்தார்.

## முள்ளிவாய்க்கால் படுகொலையை ஆதாரத்துடன் எடுத்துக்காட்டினார்

முள்ளிவாய்க்காலில் பெரும் இனவழிப்பு நிகழ்தப்பட்டு உரிமைப்போராட்டம் நசுக்கப்பட்டுவிட்டதாகவும் தழிழினத்தின் தலைமைத்துவம் வெறுமைப்படுத்தப்பட்டுவிட்டது என்கின்ற சூழலில் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக மனித உரிமைகள் மீறல்களுக்காகவும் குரல் கொடுத்து செயலாற்ற வடக்கு -கிழக்கு வாழ் சமூக செயற்பாட்டாளர்கள் துறைசார்வல்லுநர்கள் கல்வியியலாளர்கள் மனித உரிமைகள் ஆர்வலர்கள் ஆகியோரை ஒன்றுதிரட்டி 2012ஆம் ஆண்டு தமிழ் சிவில் சமூக அமையத்தை ஆரம்பித்தார். இந்த அமைப்புத்தான் போருக்குப் பின்னர் வடக்கு- கிழக்கை மையமாகக் கொண்டு முதன்முதல் ஆரம்பிக்கப்பட்ட மக்கள் மைய சுயாதீன சிவில் அமைப்பாகும். நெருக்கடிகள் மற்றும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் மற்றும் அழிப்புகளுக்கு நீதி வேண்டி சர்வதேசத்தின் மனச்சாட்சிகளைத் தட்டி. இறுதிப் போரில் ஒரு லட்சத்து நாற்பத்தாறாயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொலைசெய்யப்பட்டோ அல்லது காணாமலாக்கப்பட்டோ உள்ளனர் என்று சரியான ஆதாரங்களுடன் நிரூபித்தார். 2013ஆம் ஆண்டில் 131 இறைபணியளர்களுடன் ஒப்பமிட்டு இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை வலுவானதாக்கும்படி ஐ.நா.வை நாடினார். இந்த நகர்வு இலங்கைக்குப் பெரும் பின்னடைவைக் கொடுத்தது.

## வாழும் இறைவாக்கின் குரலாய் வாழ்ந்தவர்

இறைவாக்கினர் என்பவர்கள் இறைவனின் நாவாகச் செயற்படுகின்றவர்கள். இவர்கள் மானிட மாண்பு சிதைக்கப்பட்டு மனிதம் மழுங்கடிக்கப்படுகின்ற சூழலில் இறைவனின் பிரதிநிதியாக அவரின் நாவாக செயற்பட்டு தீமையையும் அநீதியையும் இடித்துரைத்து மனிதம் மலர, நீதி எழுச்சியுற அச்சுறுத்தல்கள் ஆபத்துக்களை பொருட்படுத்தாது தீவிரமாகச் செயற்படுகின்றவர்களாவர். அவ்வகையில் கடந்த மூன்று தசாப்தங்களாக ஆயர் தனியொருவராக நின்று இருட்டடிக்கப்பட்ட சூழலில் இறைவனின் அழைப்புக்குத் தன்னை அர்ப்பணித்து விடுதலைக்காக உழைத்தார்.

இவ்வாறாக பல்வேறு வழிகளில் கருவறுக்கப்பட்ட ஈழத்தமிழினத்தின் விடுலைக்காகவும் நல்வாழ்வுக்காகவும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து திருப்பணியாற்றிய ஆயரின் இழப்பு என்பது என்றும் ஈடு செய்யப்பட முடியாதவொன்றாகும். வரலாற்றில் பல அழிப்புக்களுக்கும் இழப்புக்களுக்கும் முகங்கொடுத்த தமிழினத்தின் மிகப்பெரும் ஆறுதலாகவும் நம்பிக்கையாகவும் விளங்கிய தன்னுடைய தலைமகனை, விடுதலைக்கு வழிகாட்டிய மோசேயை, எவ்விடர் வந்தபோதும் அஞ்சாமல் இன விடியலுக்காய் குருஷேத்திரத்தில் இருந்து அறப்போராடிய பீஷ்மரை எவ்வேளையிலும் தமிழினம் மறவாது.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திரு.சண்முகநாதன் சிவராசா
## (சிவதாஸ்)



**பிறப்பு** **09.06.1948**

**இறப்பு** **28.03.2022**

யாழ். 59/19, செட்டித்தெரு, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகநாதன் சிவராசா (சிவதாஸ், சிவானந்தா கபேயின் மூத்த சகோதரர்) அவர்கள் கடந்த (28.03.2022) திங்கட்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகநாதன் லீலாவதி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், சுதுமலை வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா மற்றும் பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், இராசமணி (குஞ்சு) அவர்களின் பாச மிகு கணவரும், யோகராசா (ஆனந்தி), இந்திராணி, ரஞ்சினி, ஜெயதாஸ் (ஜெயா பார்மசி, நல்லூர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சர்மிலி (நோர்வே), சர்மிலா (கனடா), சஞ்சீர் (கனடா), சஞ்சித் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கோணேஸ்வரன், சசிதரன், மேகலா, சிவஜெனனி ஆகியோரின் அன்பு மாமனாரும், த்ரிஷா, மொனிஷா, யக்ஷியா, யதுர்ஷன், ஹர்ஷியா, சானுஜன், செந்துஜன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற வரதராஜா மற்றும் நாகேஸ்வரியின் அன்பு மருமகனும், சிவனேஸ்வரி, காலஞ்சென்ற மனோகரன் மற்றும் ஸ்ரீகாந்தன், கலைவாணி, சிவலிங்கம், காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் கமலாதேவி, கண்மணி, இந்திரா, சற்குணராணி, கருணை, இன்பம், குமாரராசா, பத்மஸ்ரீ ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், சுவேனிதா, கேமறனிற்றா, துஷாரா, நிலக்ஷன், தர்மினி ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும், மயூரன், செந்தூரன், அர்ச்சனா, துஷாந், நிருஜலா, சஜிலா, மயூரி, சுதர்சன், நிருஷன் ஆகியோரின் பாசமிகு பெரியமாமாவும், கஷானி, அனிஸ்மிகாவின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2022) வெள்ளிக்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் நடைபெற்று பிற்பகல் 3.00 மணியளவில் பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**தகவல்:**

**மனைவி, மக்கள், சகோதரர்கள்.**

T.P: மனைவி - 077 260 3421
சகோதரர்கள் - ஆனந்தி - 076 4040 326
ஜெயதாஸ் - 077 4829 729

(CS19153) 1-6

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் மலர்ந்தது
19 . 11 . 1939

விண்ணில் கலந்தது
17 . 03 . 2018



## திருமதி புனிதவதி சந்திரசேகரம்

என் கண்ணீர் மலர் சொரிந்து
உன் பிரிவை நினைக்கின்றேன்
என்னால் நம்ப முடியவில்லை
நான்காண்டுகள் சென்ற தென்று
உன் பந்த பாசங்கள்
உன்னை நினைந்து துடிக்கின்றன.
உன் உறவுகளின் துயர்துடைக்க வாராயோ?
அன்புக்கு இலக்கணமாய் பாசத்தின் பதவுரையாய்
ஆற்றலின் அடித்தளமாய் பண்பின் பொழிப்புரையாய்
வாழ்ந்து வழி காட்டிய என் கலங்கரை விளக்கே
நான் தோல்விக்கடலில் துவண்ட போதெல்லாம் தெப்பமாய் கைகொடுத்தவளே
துன்பம் என்னும் பெருமழையில் நனைந்தபோதெல்லாம் குடையாய் இருந்தவளே
என் வாழ்விற்கு ஒளியூட்டிய ஒளிச்சுடரே நீ அணைந்து விட்டாய்
நான் தன்னந்தனியாகத் தவிக்கின்றேன் இன்று நீ இல்லை. எனது துயர்துடைக்க
நீ நல்லைக்கந்தனின் கழல் அடியில் சாந்திபெற நெஞ்சம் நெகிழ பிரார்த்திக்கின்றேன்

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**உன் பந்த பாசங்களுடன் சேர்ந்து பிரார்த்திக்கும் உன் வாழ்க்கைத் துணை**

**சந்திரசேகரமும் உறவுகளும்**


**திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.**

(CS 19027) (3/6)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
14 . 07 . 1948

மறைவு
05 . 03 . 2022



## அமரர் சண்முகம் மகேந்திரன்

**( ஓய்வு பெற்ற பிரத்தியேகச் செயலாளர் R.D.A வவுனியா)**

சண்டிலிப்பாய் வடக்கு சண்டிலிப்பாயை பிறப்பிடமாகவும் இல. 256 மாடசாமி கோவில் வீதி பண்டாரிக்குளம் வவுனியவை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சண்முகம் மகேந்திரன் (ஓய்வு பெற்ற பிரத்தியேகச் செயலாளர் R.D.A வவுனியா ) அவர்கள் கடந்த 05.03.2022 சனிக்கிழமைஇறைபதம் ஏய்தினார்.

எமது குடும்பத்தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு உடனே ஓடி வந்து ஆறுதல் கூறி உதவிகள் பல புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் தொலை பேசி வாயிலாகவும் வேறு பல வழிகளில் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்திய அன்பு உள்ளங்களுக்கும் மறைவுச் செய்தி கேட்ட நாளிலிருந்து இறுதிக்கிரியைகள் நடைபெறும் வரை பல வழிகளிலும் உ்தவி புரிந்த உற்றார் உறவினர்கள். நண்பர்கள். அனைவருக்கும் மற்றும் ஆத்ம சாந்தியடைய பிரார்த்தித்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை 02.04.2022 சனிக்கிழமை காலை 7 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் எதிர்வரும் 04.04.2022 திங்கட்கிழமை மதியம் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**சண்டிலிப்பாய் வடக்கு**
**சண்டிலிப்பாய் .**

(CS 00984) (3/6)

**குடும்பத்தினர்**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் செல்வநாயகி திருநாவுக்கரசு

அன்புக்கோர் இலக்கணமாய்
அணைத்ததுவோ நின் கரங்கள்
பாசத்தின் பிறப்பிடமாய்
பக்குவமாய் செயற்பட்டீர் - நீங்கள்
ஏற்றிய தீ பங்கள்
நின் பாதங்களில் ஒளிர்ந்து கொண்டிருக்க
நீங்கள் மட்டும் ஏன் அணைந்துவிட்டீர்கள்
நீங்கள் ஆற்றிய பணிகள்
ஈன்ற உதவிகள்
செய்த தருமங்கள்
எமக்களித்த அன்பு பாசம்
எல்லாமே உங்கள் நினைவை
எம் அனைவர் அகத்திலும்
\- நிலைபெற்றனவே.

தோற்றம்
16.09.1940

மறைவு
13.04.2021

**88, செட்டிதெரு,**
**நல்லூர்.**

**குடும்பத்தினர்**

(cs.37756) (2/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்


யா/தம்பாட்டி அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயத்தின் ஆசிரியர்களாகிய



செல்வி. சிவதர்சினி பெரியதம்பி
(ஆசிரியை)
B.A. கலைமாணி- யாழ். பல்கலைக்கழகம்



திரு. கந்தசாமி தனுஷன்
(விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்)
B.F.A. நுண்கலைமாணி- கிழக்கு பல்கலைக்கழகம்



திரு. சரவணபவன் சுத்திலகன்
(ஆசிரியர்)
B.A. கலைமாணி- யாழ். பல்கலைக்கழகம்



திருமதி. ரஞ்சித்காந் விஜேகலா
(ஆசிரியை)
B.A. கலைமாணி- யாழ். பல்கலைக்கழகம்



திருமதி. ராகுலன் ஸ்ரீவிமலா
(ஆசிரியை)
B.A. கலைமாணி- யாழ். பல்கலைக்கழகம்



திருமதி. மேரி அஞ்சலா யேசுராசா
(முன்னாள் பிரதி அதிபர்)

பட்டத்தினை பெற்றமையயிட்டுப் பாராட்டி வாழ்த்துவதுடன்...
பிரதி அதிபர், மேரி அஞ்சலா யேசுராசா எம் வித்தியாலயத்திலேயே 31.05.1989 இல் நியமனம் பெற்றார். 09.04.1991 தன் சேவைத் தொடரில் வேறு சில பாடசாலைகளிலும் கடமையாற்றி 27.02.2013 இல் மீண்டும் எம் வித்தியாலயத்தில் சேவையைத் தொடர்ந்து 01.06.2021 இல் ஓய்வுபெற்று 32 வருட சேவையை ஆற்றி மணி விழாக் கண்டமையை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/ தம்பாட்டி அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயம்
(CS 19152) (4/6)


## UK இல் கல்வி வாய்ப்பு

- 13 வயது தொடக்கம் 22 வயது வரையுள்ள அனைத்து மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- 13 வயது தொடக்கம் 17 வரையுள்ள மாணவர்களுக்கு உடன் விசா வழங்கப்படும்.
- வருடத்திற்கான ஆரம்ப கட்டணம் £15,000

Grade 08 London → 4Years → O/L London → 2Years → A/L London → University UK

- Medicine
- Dentistry
- Law
- Business
- IT & much more

தொடர்புகளுக்கு :
Tel : +94 74 229 3324 | Whatsapp : +44 7958 408 280
Email : principal@croydonmet.org.uk, joseph.vilvaraj@gmail.com
Limited Places ! Book Appointment Now!
(CS 43874) (4/6)


## 2022 தேருநர் (வாக்காளர்) இடாப்பு கணக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது

2022 ஆம் ஆண்டிற்கான வாக்காளர்கள் கணக்கெடுப்பு 2022.02.01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனைத்து வீடுகளுக்கும் கணக்கெடுப்புப் படிவங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.

2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்படாதிருப்பின் அல்லது 2021 ஆம் ஆண்டில் பதிவு தொடர்பான முகவரியில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமாயின் 2004.01.31 அல்லது அதற்கு முன்னர் பிறந்த நபர்களை பதிவு செய்துகொள்வதற்காக


மற்றும்

18 வயது பூர்த்தியடைந்தவுடனேயே 04 மாதங்களுக்கு ஒரு முறை குறைநிரப்பு இடாப்பு ஊடாக வாக்குரிமையை

பெற்றுக்கொள்வதற்காக 16 - 18 வயதுகளுக்கிடைப்பட்ட (2006.01.31 இற்கு முன்னர் பிறந்த) பிரஜைகளைப் பதிவு செய்து கொள்வதற்காக கிராம அலுவலரைத் தொடர்பு கொள்ளவும்.

தேர்தல் ஆணைக்குழு
011-2868441 / www.elections.gov.lk
(cs.37739) (2.6)

# மோடி - ஸ்டாலின் டெல்லியில் சந்திப்பு



புதுடெல்லி, ஏப்.1

இந்தியப் பிரதமர் மோடியை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று சந்தித்துக் கலந்துரையாடினார். டெல்லியில் தி.மு.க. கட்சி அலுவலகத் திறப்பு விழா மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 4 நாள்கள் பயணமாக நேற்றுமுன்தினம் டெல்லி சென்றுள்ளார். இந்நிலையில், டெல்லி நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள பிரதமர் அலுவலகத்தில் மோடி- மு.க.ஸ்டாலின் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது தமிழகத்துக்கான நிதியொதுக்கீடுகள் தொடர்பான மனுவை பிரதமரிடம் முதலமைச்சர் கையளித்தார். அந்த மனுவில் தமிழகத்தில் டெல்டா விவசாயத்தைப் பாதிக்கும் வகையில் மேகதாது பகுதியில் கர்நாடக அரசு அணை கட்ட முயற்சிப்பது பற்றியும் கர்நாடகாவின் திட்டத்துக்கு அனுமதி வழங்கக் கூடாது என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் கச்சத்தீவு அருகே மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்கள் தினமும் இலங்கைக் கடற்படையால் சிறைபிடிக்கப்பட்டு செல்வது குறித்தும் விளக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 18 . 03 . 1938



இறப்பு 01 . 04 . 2010

## திருமதி மேரி யோசவின் பாக்கியநாதர்
(இளைப்பாறிய ஆசிரியை)

"என்னிடம் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வார்"
யோவான் : 11.25

அன்புடன் நினைவு கூரும்
கணவர்: அ. பாக்கியநாதர்
077 635 9240
கல்லூரி வீதி, மானிப்பாய்.

| பிள்ளைகள் | மருமக்கள் | பேரப்பிள்ளைகள் | பூட்டப்பிள்ளை |
| --- | --- | --- | --- |
| றெஜி<br>றொகான்<br>றதீஸ்குமார் | நிஜிதா<br>வதனி<br>தயாளினி | மரியறியாங்கி<br>ஜெறோம்<br>ஆன்செரன்<br>ஆன்சிறோனி | மெவிக் |

மற்றும் உறவினர்கள், அன்பர்கள்
(cs.19120) (2.6)

# இன்று (01.04.2022) வெள்ளிக்கிழமை மணிவிழாக் காணும் நாயகியினை வாழ்த்துகின்றோம்




Congratulations

திருமதி
## மகேஸ்வரி சிவஞானசுந்தரம்
(பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியர், கல்விமாணிப்பட்டதாரி)

**சேவை விவரம்**

| | | |
| --- | --- | --- |
| கிளி/ சிவநகர் அ.த.க. பாடசாலை | 28.08.1988 | 31.12.2007 |
| கிளி/ புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயம் | 01.01.2008 | 10.10.2010 |
| கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயம் | 11.10.2010 | 06.01.2019 |
| கிளி/ சிவநகர் அ.த.க. பாடசாலை | 07.01.2019 | 01.04.2022 |

மணிவிழாக் காணும் மங்கலப் பொன்னாளில் மாறா இளமை
மங்காப் புகழ் குறையா செல்வம் வாழ்நாள் வெற்றி
எல்லையில்லா இன்பம் எல்லாமும் பெற்று இனிதே வாழ
வாழ்த்துகின்றோம்.



வாழ்த்துவோர் :
பாடசாலைச் சமூகம்
கிளி/சிவநகர் அ.த.க. பாடசாலை, சிவநகர், உருத்திரபுரம்
(18128) (4/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டில்...

பகுதிகளிலும் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நாட்டில் விலைவாசி உயர்வு, எரிவாயு, எரிபொருள் தட்டுப்பாட்டுடன் தற்போது நீண்ட நேர மின்வெட்டும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. நேற்று தொலைத் தொடர்பு வலையமைப்புக்களும் தடைப்பட்டிருந்தன.

நாட்டின் நெருக்கடி நிலைமையால் வாழ்க்கையைக் கொண்டு நகர்த்த முடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ள மக்கள் தன்னிச்சையாக நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர். மக்களின் ஆர்ப்பாட்டங்கள் காரணமாக சில இடங்களில் போக்குவரத்துத் தடைப்பட்டது என்று அறிய முடிகின்றது.

அதேவேளை, எரிவாயுத் தட்டுப்பாடு மற்றும் மின்சாரத் துண்டிப்புக் காரணமாக பல நகரப் பகுதிகளில் வர்த்தக நிலையங்கள் நேற்று மூடப்பட்டிருந்தன.

காலி - கொழும்பு பிரதான வீதியின் பம்பலப்பிட்டி பகுதியில் வீதியை மறித்து நேற்று முற்பகல் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கண்டி, அம்பலாங்கொட, உடவளவ, ஹொரணை, கொள்பிட்டி உட்படப் பல இடங்களில் மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதேவேளை, எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மாணவர்களைப் பாடசாலைகளை அழைத்துச் செல்வதில் சிக்கல் நிலைமை தோன்றியுள்ளது என்று கூறப்படுகின்றது. பாடசாலைச் சேவையில் ஈடுபடும் பல வாகனங்கள், டீசல் இல்லாததால் சேவையை நிறுத்தியுள்ளன என்று தெரியவருகின்றது. (அ-எ-இ)

## துணைத்தூதரகம்...

களை வழங்க இந்திய மத்திய அரசு அனுமதிக்க வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்திய நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கும் இடையே இந்தக் கோரிக்கையை அவர் முன்வைத்துள்ளார்.

தற்போது இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், இலங்கைத் தமிழர்கள் சிலர் தமிழகத்துக்கு புகலிடம் கோரிச் சென்றுள்ளனர். இந்த நிலையில் தமிழக முதலமைச்சரால் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## யாழில்...

போராட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

உங்களுக்கு உல்லாச வாழ்வு, எங்களுக்குப் பட்டினிச் சாவா?, மக்களே வாரீர் கோத்தா, மகிந்த, பஸில் ஆட்சியிடம் நியாயம் கேட்போம் என்ற கோஷத்துடன், சனிக்கிழமை மு.ப.10 மணிக்கு யாழ்ப்பாணம் பஸ் நிலையம் முன்பாக புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் வடபிராந்திய செயலணி ஏற்பாட்டில் போராட்டம் நடத்தப்படவுள்ளது. (அ-எ-இ)

## 210 தாதியர்களுக்கு...

திங்கட்கிழமை 210 தாதியர்கள் நியமிக்கப்படவுள்ளனர். அதேவேளை வடக்கு மாகாண மருத்துவமனைகளிலிருந்து 210 தாதியர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்லவுள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையிலிருந்து 75 தாதியர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்வதற்கு காத்திருக்கின்றனர். அங்கு எத்தனை தாதியர்கள் நியமிக்கப்படவுள்ளனர் என்ற விவரம் இன்னமும் வெளியாகவில்லை.

இதேவேளை - இடமாற்றம் பெற்றுச் செல்லும் தாதியர்களின் எண்ணிக்கையளவு தாதியர்களே நியமிக்கப்படுவதால், வடக்கில் தொடர்ந்தும் தாதிய வெற்றிடம் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

## இடைத்தங்கல்...

நிலையங்களிலிருந்து பொருள்கள் மாயமானதாக கணக்காய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தபோதும், அவ்வாறு எந்தவொரு பொருள்களும் மாயமாகவில்லை என்று வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களம் வடக்கு மாகாண ஆளுநருக்கு நேற்றுக் காலை அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கடந்த ஆண்டு கொரோனா இடைத்தங்கல் நிலையங்கள் நாவற்குழி, மருதங்கேணி, வட்டுகோட்டையில் செயற்படுத்தப்பட்டன. மருதங்கேணி இடைத்தங்கல் நிலையத்திலிருந்த பொருள்கள் பலவற்றைக் காணவில்லை என்று கணக்காய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த விடயம் தொடர்பில் விசாரணை நடத்துமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்சவும் பணித்திருந்தார்.

இந்த நிலையில் இது தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால், வடக்கு மாகாண சுகாதார திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கையில், மருதங்கேணி இடைத்தங்கல் நிலையத்துக்கு வழங்கப்பட்ட பொருள்கள் வட்டுக்கோட்டை மற்றும் நாவற்குழி இடைத்தங்கல் நிலையங்களுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ஒ-5)

## இன்று...

நடைமுறைப்படுத்தப்படும் என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்தது.

இன்று ஒரு தொகுதி எரிபொருள் அனல் மின் நிலையங்களுக்குக் கிடைக்கும் என்பதால் மின்வெட்டு நேரம் குறைக்கப்பட்டுள்ளது என்றும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (எ-இ)

## கோத்தாபயவின்...

ஜனாதிபதியின் இல்லத்துக்குச் செல்லும் வீதியை மறித்துப் பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அந்தப் பகுதியில் பெரும் எண்ணிக்கையான பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது. வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டு, மக்கள் நகரவிடாது தடுக்கப்பட்டனர். ஆர்ப்பாட்டம் மேற்கொண்டோர் அதையும் மீறி ஜனாதிபதியின் இல்லத்துக்குள் நுழைய முயன்றதால் பெரும் பதற்ற நிலைமை ஏற்பட்டது. இரவு 10.45 மணியளவில் முதலாவது பொலிஸ் தடையை உடைத்து ஆர்ப்பாட்டம் மேற்கொண்டோர் முன்னேறியதால் நிலைமை இன்னும் மோசமானது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அரசாங்கத்தின் தவறான நிர்வாகத்துக்கு எதிராகவுமே பொதுமக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். நாடு எதிர்கொண்டுள்ள தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வு வழங்க வேண்டும் என்றும், ஜனாதிபதி உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட இளைஞர், யுவதிகள் வலியுறுத்தினர்.

தன்னிச்சையாகவே பெருந்திரளான இளைஞர், யுவதிகள் திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். "ஜனாதிபதி அவர்களே உங்கள் வீட்டில் மட்டும் எவ்வாறு மின்சாரம்?", "எங்களுக்கு ஜனாதிபதி வேண்டாம்" என்று அவர்கள் கோஷமிட்டதைக் காண முடிந்தது. நேரம் செல்லச் செல்ல அங்கு திரண்டுள்ளோரின் எண்ணிக்கை அதிகரித்தவண்ணம் இருந்தது. இரவு 10 மணியளவில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் இல்லம் உள்ள பகுதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. நாட்டில் மின் தடை நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னரான காலப்பகுதியில் முதல்தடவையாக நேற்று அந்தப் பகுதியில் மின் தடைப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் இணைய சேவையும் முடங்கியது. இரவு 10 மணிக்குப் பின்னர் இணைய சேவை சீராக இல்லாததால் அந்தப் பகுதியில் இருந்து சமூக வலைத்தளங்கள் ஊடாக பதிவேற்றப்பட்டு வந்த நேரடிக் காட்சிகளுக்குத் தடங்கல் ஏற்பட்டது.

ஜனாதிபதியின் வீடு முழுமையாக மக்களால் சுற்றிவளைக்கப்பட்ட நிலையில் எவரும் நுழையவோ, வெளிச்செல்லவோ முடியாத நிலைமை காணப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அங்கு பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தவர்களுடன் வாக்குவாதங்களில் ஈடுபட்டனர். ஜனாதிபதியின் இல்லத்தின் வாயிலில் பெருமளவிலான பொலிஸாரும், சிறப்பு அதிரடிப்படையினரும் குவிக்கப்பட்டுப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது.

இரவு 10.15 மணியளவில் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு பொதுமக்கள் கலைக்கப்பட்டனர். சிதறி ஓடிய மக்கள் ஆத்திர மேலீட்டால் பொலிஸாரின் வாகனங்கள் மீதும், இராணுவத்தினரின் பஸ்கள் மீதும் தாக்குதல் நடத்தினர். நீர்த்தாரைப் பிரயோகத்தைத் தொடர்ந்து பல தடவைகள் கண்ணீர்ப் புகைக்குண்டுகள் வீசப்பட்டன. ஆர்ப்பாட்டத்தின் ஈடுபட்ட மக்கள் சிதறி ஓடி பாதுகாப்பான இடங்களை நாடியதுடன், ஜனாதிபதிக்கு எதிராகத் தொடர்ந்து கோஷங்களை எழுப்பினர். அந்தச் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வீட்டில் இருந்து பாதுகாப்புத் தரப்பினரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். மக்கள் கூட்டம் அங்கிருந்து அகல மறுத்து தொடர்ந்து இரவிரவாகப் போராட்டத்தில் ஈடுபட்டது. ஆர்ப்பாட்டத்தில் மேற்கொண்டவர்களும் பொலிஸாருக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டன. அதில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் ஊடகவியலாளர் ஒருவரும் காயமடைந்துள்ளனர்.

அதேநேரம் பாதுகாப்புத் தரப்பினரை ஏற்றிவந்த பஸ் ஒன்றுக்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தீ வைத்தனர். நேற்று நள்ளிரவு 12 மணியளவில் அந்த இடத்தில் சுமார் 5 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கூடி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். பல்வேறு இடங்களில் இருந்தும் மக்கள் அங்கு வந்து திரள்வதைக் காண முடிந்தது.

இந்தச் செய்தி அச்சுக்கு போகும்வரை ஜனாதிபதியின் இல்லம் அமைந்துள்ள பகுதியில் பதற்ற நிலைமை தொடர்ந்த வண்ணம் இருந்தது. (அ-எ)

## கோவளத்தில்..

பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மாதகலைச் சேர்ந்த 25 வயதுடைய ஒருவர், முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சேர்ந்த 20 வயதுடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்ற என்றும், விசாரணைகளின் பின்னர் அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-23)

## சகோதரர்கள்...

மல் போயுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இவர்கள் கடற்றொழிலுக்குச் சென்ற நிலையில், இன்னமும் கரை திரும்பவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக குடும்பத்தினர் நேற்று புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கடற்படையினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும், கடற்படையினர் அவர்களைத் தேடும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-10)

## பரீட்சைகளுக்கு...

பில் உள்ளன என்று கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

அஸ்கிரிய மகாநாயக்க தேரரை நேற்று முன்தினம் சந்தித்த அமைச்சர், பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்வரும் மே மாதம் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் கல்வி அமைச்சர் தெரிவித்தார். (அ-எ-இ)

## டீசல்...

களும் நிறுத்தப்படும் நிலைக்குச் சென்றுள்ளன என்று இலங்கை மின்சார சபைத் தகவல்கள் தெரிவித்தன.

நுரைச்சோலை அனல் மின் நிலையமும், நீர் மின் உற்பத்திக் கட்டமைப்புமே இயங்கும் நிலையில் உள்ளன என்று தெரியவருகின்றது.

இந்த இரு மின் உற்பத்திக் கட்டமைப்புக்களில் இருந்து ஆயிரத்து 200 மெகாவாட்ஸ் மின்சாரத்தையே பெற்றுக் கொள்ள முடியும் என்றும், இது 10 மணித்தியாலங்களுக்கே போதுமானது என்றும் உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன.

இந்த நிலைமை தொடர்ந்தால் 16 மணி நேர மின்வெட்டை நடைமுறைப்படுத்த வேண்டிய நிலைமை ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-இ)

## இலங்கை...

டீசல் கிடைக்காவிட்டால் இன்று 16 மணி நேரம் அல்லது அதற்கு அதிகமான நேரம் மின்சாரம் தடைப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதைய மின்வெட்டை இரண்டு மணித்தியாலங்களால் குறைப்பது தொடர்பாகக் கவனம் செலுத்தியுள்ள அரசாங்கம், லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்திடம் இருந்து 6 ஆயிரம் மெற்றிக்தொன் டீசலைப் பெறத் திட்டமிட்டுள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உரிய எரிபொருளைக் கொள்வனவு செய்து, நேரடியாக மின் உற்பத்திக்கு வழங்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று இரவு 11 மணிக்கு முன்னதாக எரிபொருளை மின்சார சபையிடம் ஒப்படைக்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. உரிய நேரத்தில் எரிபொருள் கிடைத்தால், மின்வெட்டு நேரத்தைக் குறைக்க முடியும் என்று மின்சார சபை தெரிவித்துள்ளது. (அ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரசியல்வாதிகள் அனைவரும் பிச்சைக்காரர்

கொழும்பு, ஏப்.1

தமிழ் அரசியல்வாதிகள் அனைவரும் பிச்சைக்காரர்கள். அனைவரும் திருத்தப்பட வேண்டும் என்று யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத் துணைவேந்தர் எஸ்.ஸ்ரீசற்குணராஜா கூறியுள்ளார்.

தந்தை செல்வாவின் 124ஆவது ஜனன தின நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்துக்கும் அதிகமான கணவனை இழந்த பெண்கள் இருக்கிறார்கள். ஆனால் எமது அரசியல் வாதிகளிடம் அவர்களுக்கு உதவ எந்தத் திட்டமோ, நிகழ்ச்சி நிரலோ இல்லை.

ஏதாவது ஒரு சம்பவம் என்றால் முதல் நாள் கூட்டத்தைக் கூட்டி ஒரு அறிக்கையைத் தயாரித்து அதை வாசித்துவிட்டுச் செல்லும் கலாசாரம் ஒழிக்கப்படவேண்டும்.

அடுத்த மாகாண சபைத் தேர்தலுக்கு எவ்வாறு செயற்படுவது என்று சிந்திக்கிறார்களே தவிர, தமிழ் மக்களைக் காப்பாற்றுவதற்காக அரசியல்வாதிகள் செயற்படவில்லை.

நாங்கள் தோற்கடிக்கப்பட்டவர்களாக இருக்கலாம். ஆனால் தொடர்ந்தும் அவ்வாறே இருக்கத் தேவையில்லை. எமக்கென்று ஒரு பாரம் பரியம் உள்ளது.

இந்தியாவில் எத்தனையோ மொழிகள் எத்தனையோ இன மக்கள் உள்ளார்கள். ஆனால் அவர்கள் இன்று உலக நாடுகளில் தலைசிறந்து விளங்குகின்றார்கள். அதற்கு காரணம் சிறந்த அரசியல் யாப்பை உருவாக்கியதே காரணம்.

ஆனால் நமது அரசியல்வாதிகள் அரசியல் யாப்பை உருவாக்குவது தொடர்பில் சிந்திக்கவில்லை. இன்றும் 13 ,13+ சமஷ்டி என்று தமக்குள் முரண்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்- என்றார். (எ-இ)

# 2ஆம் திகதிக்கு பின்னர் மின்வெட்டு குறையும்!

*மின்சார சபை தலைவர் நம்பிக்கை*

கொழும்பு, ஏப்.1

நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள மின்வெட்டு நேரம் எதிர்வரும் ஏப்ரல் 2 ஆம் திகதிக்குப் பின்னர் 4 மணிநேரமாக குறைக்கப்படும் என்று இலங்கை மின்சார சபையின் தலைவர் எம்.எம்.சீ. பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எதிர்வரும் 02 ஆம் திகதி டீசல் தொகையொன்று வருகின்றது என்றும், அதை மின்சார சபைக்கு வழங்குவோம் என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உறுதியளித்துள்ளது. எனவே, எமக்கு டீசல் கிடைத்த பின்னர், நாட்டில் தற்போது அமுலில் உள்ள மின்வெட்டு நேரத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதன்படி 4 மணிநேரத்துக்கும் குறைவான நேரமே மின்வெட்டு நடைமுறையில் இருக்கும்.

அத்துடன், எமக்கு தொடர்ச்சியாக எரிபொருள் கிடைக்கப்பெறும்பட்சத்தில் மின்வெட்டை நடைமுறைப்படுத்த வேண்டிவராது. இதுதான் உண்மை நிலைவரம்- என்றார். அதேவேளை, உமாஓயா திட்டத்தை இந்த வருடத்துக்குள் திறப்பதற்கு எதிர்பார்க்கின்றோம். நீர்மின் உற்பத்திக்குத் தேவையான நீரை இதன்மூலமும் பெற்றுக்கொள்ள முடியும் என்று மின்சக்தி அமைச்சர் பவித்ராதேவி வன்னியாராச்சி குறிப்பிட்டார். (எ-44)

# வடலியடைப்பில் சங்கிலி அறுப்பு!

யாழ்ப்பாணம், ஏப்.1

இளவாலை, வடலியடைப்பில் வீதியால் பயணித்த பெண் ஒருவரின் தங்கச் சங்கிலி, மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் அறுத்துச் செல்லப்பட்டுள்ளது. அந்தப் பெண் தனது பிள்ளையைப் பாடசாலையில் ஏற்றச் சென்றபோதே இந்தச் சம்பவம் நடந்துள்ளது. வடலியடைப்பு பூம்பத்தை வீதியில் இருந்து அராலி தெல்லிப்பழை பிரதான வீதியூடாகச் சென்றபோது மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு எவ்வாறு செல்வது என்று கேட்டுவிட்டு. திடீரென பெண்ணின் கழுத்தில் இருந்த அரைப் பவுண் சங்கிலியை அறுத்துக்கொண்டு, வட்டுக்கோட்டை நோக்கித் தப்பிச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-125)

# காங்கிரஸின் தலைவராக செந்தில் தொண்டமான்



கொழும்பு, ஏப். 1

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தேசியசபைக் கூட்டம் நுவரெலியா கொட்டகலையிலுள்ள சி.எல்.எவ். வளாகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

கூட்டத்தின் ஆரம்பத்தில் மறைந்த தலைவர் ஆறுமுகன் தொண்டமான் உட்பட உயிரிழந்த கட்சி செயற்பாட்டாளர்கள், ஆதரவாளர்கள், பிரமுகர்கள் ஆகியோருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதன்பின்னர் காங்கிரஸின் முக்கிய பதவிகளுக்கான தேர்வுகள் இடம்பெற்றன.

இதன்போது தலைவராக செந்தில் தொண்டமான், தவிசாளராக நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன், பொதுச் செயலாளராக இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், பிரதித் தலைவர்களாக மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான கணபதி கனகராஜ், அனுசியா சிவராஜா, பிரதித் தவிசாளராக முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் பி.ராஜதுரை, தேசிய அமைப்பாளராக முன்னாள் மாகாணசபை உறுப்பினர் சக்திவேல், பிரதி பொதுச் செயலாளராக செல்லமுத்து, அரசியல் பிரிவு உதவி தேசிய அமைப்பாளராக ராஜமணி பிரசாந், தொழிற்சங்கப் பிரிவு தேசிய அமைப்பாளராக பழனிசசிக்குமார், காங்கிரஸின் போசகர்களாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன், சிவராஜா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (ஒ-14-44)

**காணி விற்பனைக்குண்டு**
யாழ். கோண்டாவில் கிழக்கில் கோண்டாவில் சந்தியில் இருந்து 600 M தூரத்தில் 3 3/4. பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
077 986 6444

**வீடு வாடகைக்கு உண்டு**
யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகாமையில். 3 படுக்கை அறைகள். 2 பெரிய வரவேற்பறை. வீட்டுடன் கூடிய Bathroom உடன் வீடு வாடகைக் உண்டு. (உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது)
வாடகை:-25,000.00, முற்பணம்:- 250,000.00
074 291 9908

**வேலையாள்கள் தேவை**
தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலைக்கு முன்பாக அமைந்துள்ள பேச்சி உணவகத்துக்கு ஆண், பெண் இருபாலாரும் பணிக்கு தேவை. அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது. அத்துடன் றைஸ், கொத்து மேக்கரும் தேவை. 4.00 மணிக்கு பின்னர் தொடர்புகொள்ளவும்.
(CS 43883) (2.6)
077 639 5159, 077 899 8157

**போட்டிப் பரீட்சை நேரடி வகுப்புக்கள்**
ஞாயிறு (3/4) 9.00am பிரதி ஞாயிறு 9.30am-2.30pm
தவசேகர் வளவாளர்குழு
SLEAS,SLAS SLPS,SLAcS, SLAgr,LL.B,GS, MSO,Teaching
சகல பரீட்சைகளுக்குமான வினாத்தாள் களுக்கும்
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப் புக்கள் பிரிவு.
யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்
சகல விபரங்களுக்கும் T.P/whatsapp 076 688 3394

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் கைதடியில் 10 பரப்புக்காணி விற்பனைக்கு
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- A-09 றோட்டின் முகப்பில் இருந்து இரண்டாவது காணி (50M தூரம்)
- பிள்ளையார் வீதியில் (பெற்றோல் நிரப்பு நிலையம் அருகாமை வீதி)
- 20 அடி பாதையுடன்

தொடர்பு : 077 623 4204

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் மறவன்புலத்தில் 90 பரப்புக்காணி விற்பனைக்கு (நிலப்பரப்பு)) மறவன்புலம் மாவடி சந்திக்கு அருகாமை
- 16 அடிப்பாதையுடன்
- இரண்டு பரப்பாகவும், 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம்-பூநகரி பிரதான வீதியில் (A-32) இருந்து 200M தூரத்தில்
- சகலகலாவல்லி வித்தியாலயம் அருகாமை
- நாவற்குழி சந்தியில் இருந்து 2 1/2 KM தூரம் (A-9)
- நல்ல தண்ணீர் கிராமம் (மணல் மண்)
- அதிக குடியிருப்புக்கள் சூழல் உள்ள காணி (நல்ல சூழல்)
- ஒருபரப்பின் விலை ( 350000/= )மூன்று இலட்சத்துஐம்பதுஆயிரம் மட்டும்.

தொடர்பு :
074 291 3725 /074 291 3726/074 291 3727

**வேலையாட்கள் தேவை**
மன்னாரில் உள்ள வெதுப்பகத்திற்கு, வேலை தெரிந்தவர்களும் (Bass). உதவியாளர்களும் (Labours) தேவை.
(CS 19134) (4/6)
076 089 8020

**புதிய பிரிவுகள் ஆரம்பம் 02/04/2022**
வங்கியியல் கற்கை நெறிகள்
Banking Courses
IABF & DABF
கணக்காளர் கற்கை நெறிகள்
Chartered Accounting Courses
Business level - I ,II
தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு
aat [ Sri Lanka]
[AA1, AA2, AA3]
G.C.E. A/L பெறுபேற்றினை எதிர் பார்திருப்பவர்களும் கற்கலாம்.
Certificate Course in English
Further Details: Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
021 222 3382
021 222 9149
077 440 5917
(CR 37730) (3-6)

**காணி விற்பனைக்கு உண்டு**
யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி முதலாம் ஒழுங்கை பகுதியில் இரண்டு பரப்பு (2) காணி சுற்றுமதிலுடன் அவசர விற்பனைக்கு உண்டு. குறித்த ஆதனத்தை கொள்வனவு செய்ய ஆர்வமுள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். அத்துடன் (4 1/2) நான்கு அரை பரப்பு காணியும் சுற்றுமதிலுடன் அவசர விற்பனைக்கு உண்டு.
பார்வையிடும் நேரம்:- 8.00AM-6.00PM
தொடர்பு : 077 862 6251, 074 008 9086

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 74 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
நிலப்பரப்பு
சுண்டிக்குளம் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் A32 பிரதான வீதியில் இருந்து இரண்டாவது காணி. A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப்பாதைகள் உள்ளன. 14 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் 4 பரப்பாகவும் 5 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது. நல்ல தண்ணீர் கட்டுக் கிணற்றுடன் பயன்தரும் 276 தென்னைகள் உள்ளன.
பார்வையிடும் நேரம்
காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை,
ஒரு பரப்பின் விலை 450000.00
(தரகர் தேவையில்லை)
ஜெயம்:-
077 814 7389, 077 241 7589

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.04.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.